Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஐப்பசி 11 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றம்ழான் 02 (28.10.2003) செவ்வாய்க்கிழமை இதழ்:28

நிரைவாகவும், துல்லியமாகவும் உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
உள்நாடு வெளிநாடுகளுக்கான சகல விதமான
துரித தபால் / பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency Post Office
303, K.K.S ROAD, JAFFNA T.P- 021-222 2670,
FAX-222 3214, email-del-smskr@eureka.lk

## கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சனை

# நீக்கக்கோரும் சந்திரிகாவின் கடிதத்துக்கு நோர்வேப் பிரதமர் பதில் அனுப்பிவைத்தார்!

## உடனடி நடவடிக்கை எடுக்காதது குறித்து ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் ஏமாற்றம்

(கொழும்பு)

**இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரை பதவியில் இருந்து நீக்குமாறு - நோர்வேப் பிரதமர் கஜெல் மெக்னே பொண்டவிக்கிற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அனுப்பிய கடிதத்துக்கு, சில தினங்களுக்குப் பின்னர் நோர்வேப் பிரதமரிடம் இருந்து பதில் அனுப்பப்பட்டுள்ளதாக - ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

நோர்வேப் பிரதமர் பொண்டவிக்கிற்கு ஜனாதிபதி சந்திரிகா 23 ஆம் திகதி அனுப்பிவைத்த கடிதத்துக்கே நோர்வேப் பிரதமர் இந்தப் பதில் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகாவின் வேண்டுகோளைத் தாம் கவனமாகப் பரிசீலிப்பதாக உறுதியளித்திருக்கும் பிரதமர் இந்த விடயம் குறித்து, முக்கிய கவனம் செலுத்தும்படி தனது வெளிவிவகார அமைச்சருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக இந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை போர் நிறுத்தக் கண்

(10 ஆம் பக்கம் பார்க்க)



கூட்டுப் படைகளின் தளபதியாக நேற்று பதவியேற்ற லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல இராணுவ மரியாதையை ஏற்றுக்கொள்வதை முதற்படத்திலும், கடமையை பொறுப்பேற்று அணிவகுப்பை பார்வையிடுவதை மற்றைய படங்களிலும் காணலாம்.

## அமைச்சர் தொண்டமான் இன்று தமிழ்ச்செல்வனைச் சந்திக்கிறார்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.பதமிழ்ச்செல்வனை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான குழுவினர் இன்று கிளிநொச்சியில் சந்திக்கின்றனர்.

அரசாங்கத்திடம் விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்படவிருக்கும் இடைக்கால நிர்வாகத் திட்டவரைபு தொடர்பாக கலந்துரையாடப்படும்.

இந்தச் சந்திப்பில் இ.தொ.கா பிரதித் தலைவரும், அமைச்சரின் ஆலோசகருமான எம்.எஸ்.செல்லச்சாமி, இ.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



ஏமாற்றாதே... ஏமாறாதே...

## யாழ். திருக்குடும்ப கன்னியர்மட வகுப்பறையில் கைக்குண்டு மீட்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலை வகுப்பறைக்குள் வெடிக்காத நிலையில் கைக்குண்டொன்று நேற்று இராணுவத்தினரால் மீட்கப்பட்டது.

வகுப்பறையினுள் காணப்பட்ட கைக்குண்டு ஒன்றைக் கண்ட காவலாளி அதிபருக்குத் தெரியப்படுத்தினார். இதனையடுத்து, இராணுவத்தினருக்கு இது தொடர்பாக தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்திற்கு வந்த இராணுவ வெடிபொருள் அகற்றும் பிரிவினர் கைக்குண்டை அகற்றினர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனைக் கைது செய்யாதமைக்கான காரணங்களை கோருகிறது உயர்நீதிமன்றம்

(கொழும்பு)

கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் 200 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைக் கைதுசெய்யுமாறு நீதிமன்றம் பிறப்பித்த பிடியாணையை நடைமுறைப்படுத்தாமைக்கான காரணங்களை வெளிப்படுத்துமாறு மேல்முறையீட்டு நீதிமன்றம் குற்றப்புலனாய்வுத்துறைப் பணிப்பாளருக்கு நேற்று உத்தரவிட்டுள்ளது.

மேல் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய விடுதலைப் புலிகளின் தலைவரைப் புலனாய்வுத் திணைக்களம் இதுவரை கைதுசெய்யவில்லை எனத் தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை ஆராய்ந்த பின்னரே உயர் நீதிமன்றம் இந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பெண் மீது பொலிஸார் வல்லுறவு; கண்டித்து நேற்று மன்னாரில் பேரணி!

### 2000 இற்கு மேற்பட்டோர் பங்குபற்றினர்

(மன்னார்)

மன்னார் உயிலங்குளப் பகுதியில் பொலிஸாரினால் பெண்ணொருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதைக் கண்டித்து - நேற்று மன்னாரில் மக்கள் பேரணியொன்று நடைபெற்றது.

இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் இந்தப் பேரணியில் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் மதவாச்சி 11 ஆம் கட்டைப் பகுதியிலிருந்து பொதுமக்கள் பேரணியும், உயிலங்குளத்தின் 8 ஆம் கட்டைப் பகுதியிலிருந்து இன்னொரு பேரணியுமாக உயிலங்குளத்திலுள்ள பொலிஸ் நிலையம் முன்பாக வந்தடைந்தன. இந்தப் பேரணியில் கலந்துகொண்டவர்களால் 'இராணுவமே வெளியேறு', 'எமது இடம் எமக்கு தேவை', 'பெண்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் இருக்க இலங்கையரசே வழிசெய்', 'மன்னார் மாவட்டத்திலுள்ள பாதுகாப்பு நிலைகளை உடன் அகற்று', 'சம்பந்தப்பட்ட பொலிஸாரினை சட்டத்தின்முன் நிறுத்தி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கைத்தொழில் அபிவிருத்தி சபை தலைவர் பலாலி விமானத் தளத்தில் காத்திருப்பு!

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவர் பந்துல பெரேரா, நேற்று பலாலி விமானத்தளத்தில் நீண்டநேரமாக பாதுகாப்பைக் காரணம்காட்டி தடுத்துவைக்கப்பட்டார்.

நேற்று, யாழ்.செயலகத்தில் நடைபெறவிருந்த சிறு மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களுக்கான ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக, அவர் யாழ்ப்பாணம் வந்திருந்தார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## எரியுண்ட நிலையில் இளைஞனின் சடலம் ஆவரங்கால் பகுதியில் மீட்பு!

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து எரியுண்ட நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி - மருதடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை முரளிதரன் (வயது 35) என்பவரது சடலமே எரியுண்டநிலையில் நேற்றுமாலை 6 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளது. புத்தூர் பகுதியிலுள்ள கடையொன்றில் வேலைசெய்யும் இவர் சம்பவ (10 ஆம் பக்கம் பார்க்க)

## பயிற்சியில் ஈடுபட்டிருந்தவேளை இராணுவச் சிப்பாய் உயிரிழப்பு!

(சாவகச்சேரி)

சாவகச்சேரியிலுள்ள படையினரின் பயிற்சி முகாமில் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று நடந்த இந்தச் சம்பவத்தில் அனுராதபுரம் மகாவிலாச்சியைச் சேர்ந்த டிங்கிரி பண்டாகே புஷ்பகுமார (வயது 27) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் எஸ்.பாலகிருஷ்ணன், சாவகச்சேரி பொலிஸ்நிலைய குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்ற பனை, தென்னைவள மேம்பாட்டு கருத்தமர்வு

(கிளிநொச்சி)

பனை, தென்னைவள மேம்பாட்டுக் கருத்தமர்வு நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் கிளி. மத்திய கல்லூரியில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரினை தமிழீழ நிர்வாக சேவையின் துணைப் பொறுப்பாளர் ஏற்றிவைக்க, தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஏற்றி வைத்தார். கூட்டுறவுப் கொடிகளை பிராந்திய, மாவட்ட பொது முகாமையாளர்கள் ஏற்றிவைத்தனர்.

வரவேற்புச் சுடர்களை வன்னி மாவட்டங்களின் கூட்டுறவு உதவி ஆணையாளரும், கிளிநொச்சி மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாரும் ஏற்றிவைத்தனர்.

தொடர் நிகழ்வுகள் முன்னாள் வட பிராந்திய கூட்டுறவு உதவி ஆணையாளர் தி.சபாரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

ஆசியுரைகளை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளரும், கிழக்கு இலங்கை பல்கலைக்கழக பேராசிரியர் வீ.கணேசலிங்கமும் வன்னி மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் ஏ.சின்னத்தம்பியும் வழங்கினர்.

தொடர்ந்து சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பொ.சிவபாதம் சிறப்புரை நிகழ்த்தினார்.

பனை அபிவிருத்தி சபைத் தலைவரிடம் பதினொரு கோரிக்கைகள் உள்ளடங்கிய பத்திரம் சபையில் வாசித்து பேரிணையத்தால் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கருத்தமர்வில் வவுனியா வளாக வணிகத்துறை பீடாதிபதி பேராசிரியர் நந்தகுமார், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளர்கள் கலாநிதி ச.பாலகுமார், கலாநிதி பி. நவரட்ணம் ஆகியோரும் தென்னை ஆராய்ச்சி உத்தியோகத்தர் குணதிலக, பனை அபிவிருத்திச் சபை பரிசோதனை உத்தியோகத்தர் க.குலேந்திரா, பொது முகாமையாளர் சோ.கோகுலதாசன் ஆகியோர் தமது அறிக்கைகளை வாசித்து விளக்கமளித்தனர்.

இரு நாள் கருத்தரங்கின் தொகுப்புரையினை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் வழங்கியதுடன், பனை தென்னை அபிவிருத்திக்கான ஆலோசனைச் சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

இத்துடன் வடமாகாண பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணைய பொதுமுகாமையாளர் கி.சிவகேசனின் நன்றியுரையுடன் கருத்தமர்வு நிறைவடைந்தது.

# பௌத்த பிக்கு ஒருவர் இனந்தெரியாதோரால் கொலை!

(கொழும்பு)

திக்குவெல்ல என்ற இடத் தைச் சேர்ந்த விகாரையின் பிரதித் தலைமைப் பிக்கு ஒருவர் இனந் தெரியாத குழு ஒன்றினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

ஆயுதபாணிகள்' மூவர் பிரதித் தலைமைப் பிக்குவை விசாரணை செய்யப்போவதாக அழைத்துச் சென்றுள்ளனர். பின்னர் இவரை வலுக்கட்டாயமாக வேறொரு இடத்திற்குக் கொண்டு சென்றுள்ளனர்.

கொண்டுசெல்லப்பட்ட இடத்தில் அவரை அடித்துத் துன்புறுத்தியுள்ளனர். அதன்பின்னர் அவரை சுட்டுவிட்டு, உடலை இறப்பர் தோட்டம் ஒன்றில் போட்டுவிட்டுச் சென்றுள்ளனர்.

மேற்படி கொலையான பிரதித் தலைமைப் பிக்கு சோதிட மூலமாக நிறையப் பணம் சம்பாதித்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கொலை தொடர்பாக பிக்குவைக் கடத்திக்கொண்டு சென்ற வாகனத்தின் சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## அனுமதியின்றி வீட்டை சோதனையிட்டதாக

# தென்மாகாண சபை உறுப்பினர் அடிப்படை உரிமை மீறல் வழக்கு!

தென் மாகாண பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு ஒன்றினை உயர்நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார்.

அண்மையில் மாகாண சபை உறுப்பினர் எம்.ஜே.ரஞ்சித் என்பவர் இனந்தெரியாத நபர்களால் கொலை செய்யப்பட்டிருந்தார். இவரது கொலைக்குப் பின்னர் மகிந்த ராஜபக்ஷவின் வீட்டினை பொலிஸார் அடிக்கடி சோதனை இட்டனர். நீதிமன்ற ஆணை இல்லாமலே இச் சோதனை நடாத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு தன்னுடைய வீடு அடிக்கடி சோதனைக்கு உள்ளாவதை எதிர்த்தே அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார்.

இந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுத் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு உயர் நீதிமன்றம் ஒப்புக்கொண்டு விசாரணைகளை நடாத்திவருகின்றது.(01)

# வேகமாக வரும் வாகனங்களால் நெல்லியடியில் விபத்துக்கள்!

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியில் நெல்லியடி மத்திய பகுதிக்குள் வரும் வாகனங்கள் வேகக் கட்டுப்பாடின்றி உள்ளே வருவதால், அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. வேகத்தைக் குறைப்பதற்கான வேண்டுகோள் பலகைகள் இப்பகுதிக்குள் இல்லாமையாலேயே இவ் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இப்பகுதியில் கடமையில் ஈடுபடும் பொலிஸாரிடம் வேகத்தைக் குறித்துக்காட்டும் இயந்திரம் இல்லாமல் இருப்பது மற்றொரு குறைபாடாகும். வேகத்தைக் குறித்துக் காட்டும் இயந்திரம் வெகுவிரைவில் தமக்குக் கிடைக்கவிருப்பதாகப் பொலிஸார் கூறுகின்றனர். அதுவரை விபத்துக்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு வழியில்லையா எனப் பொது மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

இது விடயத்தில் வாகன ஓட்டுநர்கள், பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவோர், பாதசாரிகள் பொறுப்புடன் செயற்பட்டால் விபத்துக்களைக் குறைக்கமுடியுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

## வைத்தீஸ்வராக் கல்லூரியில் முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி தமிழ்ப்பேரவை மன்றம் நடாத்தும் முத்தமிழ்விழா நாளை காலை 9.30 மணிக்கு விவேகானந்தர் மண்டபத்தில் தமிழ்ப்பேரவைத் தலைவி கு.ரமா தலைமையில் நடைபெறவுள்ளது.

# வடமராட்சி கிழக்கில் நடந்த சிறுவர், முதியோர் தின விழா

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் சிறுவர், முதியோர் தின விழா கடந்த புதன்கிழமை பிரதேச செயலர் வி.ப.வேலாயுதபிள்ளை தலமையில் பிரதேச செயலர் அலுவலக மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி பா.இருதயநாதனும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி கல்விக் கழகப் பொறுப்பாளர் தாயகனும் கலந்துகொண்டனர்.

இந்தப் பிரதேசத்தில் உள்ள 18 கிராம அலுவலர் பிரிவிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட முதியவர்கள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் பாடசாலை ரீதியாக நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றியீட்டிய 60 மாணவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (122)

# முக்கோணக் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவிடம் அவுஸ்திரேலியா தோல்வி!

இந்திய, நியுஸிலாந்து, அவுஸ்திரேலிய அணிகள் பங்குகொள்ளும் முக்கோணக் கிரிக்கெட் போட்டியில் இரண்டாவது ஆட்டத்தில் நேற்றுமுன்தினம் 37 ஓட்டங்களால் இந்திய அணி அவுஸ்திரேலியாவைத் தோற்கடித்தது.

ராகுல் ட்ராவிட் தலைமையிலான இந்திய அணி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று துடுப்பாட்டத்தை ஆரம்பித்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான வீரேந்திர ஷேவாக் மூன்று பந்துகளை எதிர்கொண்ட நிலையில் எந்த ஓட்டத்தையும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

ஆனால், அடுத்து ஜோடி சேர்ந்த சச்சின் டெண்டுல்கரும், வி.வி.எஸ். லக்ஷ்மனும் நிதானமாகவும், அதிரடியாகவும் விளையாடினர். சச்சின் டெண்டுல்கர் 119 பந்துகளில் 100 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

லக்ஷ்மன் 102 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். சச்சினுக்கு பதிலாக களமிறங்கிய யுவராஜ்சிங் அதிரடியாக 33 பந்துகளில் 44 ஓட்டங்களைப் பெற்றார். அடுத்துக் களம் புகுந்த அஜித் அகாகர் 10 பந்துகளில் 22 ஓட்டங்களைப் பெற்று கடைசிப் பந்தில் ஆட்டமிழந்தார். முகமட் கை.்.ப் ஆட்டமிழக்காமல் இருந்தார். 5 விக்கெட் இழப்பிற்கு இந்திய அணி 50 ஓவர்களில் 283 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதையடுத்து துடுப்பாட்டத்தை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் கில்கிறிஸ்ரும், மத்யூ ஹெய்டனும் இந்திய பந்து வீச்சாளர்களின் பந்துகளை இலாவகமாக எதிர்கொண்டு வேகமாக ஓட்டங்களைக் குவித்தனர்.

132 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் முதலாவது விக்கெட்டை இழந்த அவுஸ்திரேலிய அணி அடுத்தடுத்து தனது முக்கிய வீரர்களை இழந்தது. கில்கிறிஸ்ட் 83 ஓட்டங்களையும், ஹெய்டன் 47 ஓட்டங்களையும், ஹொக் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

50 ஓவர்களின் முடிவில் அவுஸ்திரேலிய அணி 9 விக்கெட் இழப்பிற்கு 246 ஓட்டங்களை மட்டுமே பெற்று 37 ஓட்டங்களால் தோல்வியுற்றது.

இந்திய பந்து வீச்சாளாகளில் சகீர்கான் 3 விக்கெட்டுக்களையும், கும்ளே மற்றும் ஷேவாக் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், டெண்டுல்கர், ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந்தப் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் தனது 35 ஆவது சதத்தைப் பெற்றதுடன் தனது 60 ஆவது ஓட்டத்துடன் இரவு - பகல் ஆட்டத்தில் அதிக ஓட்டங்களைப் பெற்ற வீரர் என்ற உலக சாதனை



யையும் படைத்தார். சனத் ஜெயசூரியவின் சாதனையை முறியடித்தே இவர் இந்தச் சாதனையை நிலைநாட்டினார்.

முக்கோண கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்துடனான ஆட்டம் கைவிடப்பட்டதாலும், அவுஸ்திரேலியாவை வெற்றிகொண்டதாலும் இந்திய அணி 5 புள்ளிகளுடன் முன்னிலையில் உள்ளது. நியூஸிலாந்து அணி 1 புள்ளியை மட்டும் பெற்றுள்ளது.

அடுத்தபோட்டி அவுஸ்திரேலிய-நியூஸிலாந்து அணிகளுக் கிடையில நாளை நடைபெறும்.

# சர்வதேச செஞ்சிலுவையுடன் தொடர்புகொள்ளக் கோரிக்கை!

(யாழ்ப்பாணம்)

கீழே பெயர் குறிப்பிடப்பட்டவர்களை செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது

திருமதி உதயகுமார் சந்திரவதனி - கற்கோவளம் அகதிகள் முகாம் பருத்தித்துறை, திருமதி தங்கலிங்கம் கண்ணகிதேவி - கற்கோவளம் அகதிகள் முகாம் பருத்தித்துறை, திருமதி யோசப் ஆனந்தராணி - 1 ஆம் குறுக்குத்தெரு குருநகர் யாழ்ப்பாணம், திருமதி சேகர் பற்றிமா - 52, தண்ணீர்த் தாங்கி வீதி குருநகர் யாழ்ப்பாணம், திருமதி குணபாலசிங்கம் மனோன்மணி - புனித சூசையப்பர் கோவிலடி புலோலி தெற்கு பருத்தித்துறை, திரு.எஸ்.ஏ.டோமினிக் - 957, 16 வளன்புரம் கொழும்புத்துறை யாழ்ப்பாணம்.

ராஜா யாழ்ப்பாணம்.

பிதாமகன்

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30 (பு.நே)

ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(சி-1619)

திறைஞ்சனாஸ் சங்கானை

இன்று மட்டும் ஜீவா, ஸ்ரீதேவி நடித்த

தித்திக்குதே

நாளை முதல் எம்.ஜி.ஆர்.(இருவேடம்) சரோஜாதேவி

எங்க வீட்டுப் பிள்ளை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

XXX

(சி-1618)

யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை

பரிசளிப்பு விழா

காலம்:- 28.10.2003 செவ்வாய் பி.ப.2 மணி

இடம்:- மானிப்பாய் பிரதேசசபை கலாசார மண்டபம்

தலைவர்:- திரு.அ.நடராசா (அதிபர்)

பிரதம விருந்தினர்:- திருமதி றெஜினா இருதயநாதன் (வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம்)

சிறப்பு விருந்தினர்:- திருமதி கோகிலா மகேந்திரராஜா (பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி முகாமைத்துவம், வலிகாமம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள்.

(516)

விளம்பர அனுசரணை

மயூரா தச்சுத் தொழிற்சாலை

தாவடிச் சந்தி, மானிப்பாய் (இரும்பு, வெல்டிங் வேலைகள், பிறவேலைகள்)

# யாழ்.மாவட்டத்தின் ஹொக்கி அணி தேசிய ஹொக்கி போட்டிக்கு செல்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஹொக்கி அணி 47 ஆவது தேசிய ஹொக்கிச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவதற்காக இன்று கொழும்பு புறப்படவுள்ளது. இந்த அணியில் இடம்பெற்றுள்ளவர்களின் விபரம் வருமாறு,

ஏ.அரவிந்தன் (அணித் தலைவர்), பவானந்தி, டபிள்யூ.ஜெயநேசன், பி. தர்மகுமாரன், எம்.சயந்தரூபன், கே. உமாகஜன், எம்.விநோகாந்தன், எஸ்.சிவதீஸ், ஜி.குமரன், எம்.ஜெயரஞ்சன், எஸ்.செல்வச்சந்திரன், வி. காந்தரூபன், எஸ்.சசிகரன், எஸ். ஜெயதீபன், ஆர்.ஷாஜகான், எஸ். இந்திரதாஸ், எஸ்.மகீரன், தி.ராஜசிறிகாந்தன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

## சுன்னாகம் சாவகச்சேரி பேருந்து சேவை

சுன்னாகத்தில் இருந்து, சாவகச்சேரிக்கு தனியார் பேருந்து சேவை கடந்த வாரம் முதல் நடைபெற்று வருகின்றது.

சுன்னாகத்தில் இருந்து காலை 7.45 இற்கு புறப்படும் இத்தனியார் பேருந்து புத்தூர், மட்டுவில் ஊடாக காலை 10 மணிக்கு சாவகச்சேரியை வந்தடைகிறது. பின்னர் பகல் 1.45 இற்கு சுன்னாகத்தில் இருந்து புறப்படும் பஸ் மாலை 4 மணிக்கு சாவகச்சேரியை சென்றடைகிறது. (122)

# சமாதான நடவடிக்கையை முன்னெடுக்க அரசாங்கம் பின்னடித்து வருகின்றது

## அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்குரிய எந்த வித சாதகமான நடவடிகக்களையும், அரசாங்கமோ, அரசாங்கப் படைகளோ எடுக்கவில்லையென, விடுதலைப் புலிகளின் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று நடைபெற்ற யாழ். மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவை பேராளர் இரண்டாவது சங்கம நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்-

இன்று தேசிய எழுச்சிப் பேரவையாக உருவெடுத்துள்ள இந்த கட்டுமானம் அன்று வன்னி பெருநிலப்பரப்பிலே போர் எழுச்சிக் குழுவாக இருந்தது. தமிழினத்தின் பலத்தையும், உறுதியையும் அரசுக்கு மட்டுமல்ல சர்வதேசத்திற்கும் எடுத்துச் சொல்லியது. மக்கள் சக்தி, பலமான சக்தி என்பதை எடுத்துரைத்த ஒரு வரலாற்றை தன்னகத்தே கொண்டுள்ளது.

அன்று மக்கள் படையாக களமுனையில் பின் துணைப்படையாக போராளிகளோடு தோளோடுதோள் நின்று உழைத்த எல்லைப்படையாக விளங்கியது.

விடுதலைக்காக எமது இனம் எவற்றுக்கெல்லாம் முகம் கொடுத்து போராடவேண்டியிருந்ததோ அவற்றுக்கெல்லாம் முகம்கொடுத்து எதிர்த்து நின்றது போர் எழுச்சிக்குழு.

எமது போராளிகளினதும் போர் எழுச்சிக்குழுவினதும் பலததினாலேயே இன்றைய சமாதான சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

ஆனால், இத்தகைய ஆக்கபூர்வமான முன்னெடுப்பை எமது மக்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். அதனைப் பலவழிகளிலே எடுத்துரைத்துக் கொண்டிருக்கிறார்கள். இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் இருந்துகொண்டு, ஒவ்வொரு வரும் சமாதானத்திற்காக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

எமது தாயகப் பிரதேசமான வடக்கு - கிழக்கில் இதுவரை இயல்பு வாழ்க்கை தோற்றுவிக்கப்படவில்லை. கெடுபிடிகள், தடைகள் இன்னும் குறையவில்லை. பாதுகாப்பு வலயங்கள என்னும் போர்வைக்குள் எமது பிரதேசங்களைக் கைப்பற்றி மேலும் அதனை விஸ்தரித்து இயல்பு வாழ்வை குழப்பி வருகின்ற முயற்சியிலேயே இன்று இராணுவம் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

இடையில் வரும் சமாதானச் சூழலைப் பயன்படுத்தி உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்ற முடியாது என யாழ். மாவட்ட இராணுவத் தளபதி கூறுகிறார். இராணுவத்திற்கு சமாதானத்தின் மீது நம்பிக்கையும் விருப்பமும் இல்லை.

ஆனால், எமது இயக்கம் காலத்திற்கு காலம் பல ஆக்க பூர்வமான முன்னெடுப்புக்களை எடுத்து வருகிறது. எமது இடைக்கால நிர்வாகத் திட்டவரைபு எதிர்வரும் 31 ஆம் திகதி அரசிடம் கையளிக்கப்படவுள்ளது. இதனை எதிர்ப்பதற்கு எதிர்க் கட்சியும், ஜே.வி.பி, சிஹல உறுமய போன்ற கட்சிகளும் தயாராகி வருகின்றன.

இலங்கையில் இரு நாடுகள் உருவாகப் போகின்றன என்ற பரசாரத்தை தென்னிலங்கை சிங்கள மக்களிடம் பரப்பிவருகின்றன. எதிர்க் கட்சிகளுடைய பரப்புரைகள் இன்று பாரிய விஸ்வரூபம் எடுத்துள்ளன.

இன்றைய அரசு சமாதான நடவடிக்கைகளுக்கான நல்ல முன்னேற்றமான செயற்பாடுகளை இதுவரை எடுக்கவில்லை என்பதே எமது நிலைப்பாடாகும்.

இடைக்கால திட்டவரைபை பரிசீலித்து சரியான பாதையில் நகர்த்திச் செல்லும் எந்தவிதமான நடவடிக்கையும் அரசிடம் காணப்படவில்லை.

எமது மக்களை விழிப்படையச் செய்து உறுதியான நிலையை எமது ஒரே தலைமையின் கீழ் உருவாக்கி, மக்களை அணிதிரட்டி விடுதலைக்காக உழைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

### கொரிய நாட்டின் மருத்துவ சேவைக்குழு இலங்கை விஜயம்

(கொழும்பு)

கொரிய மருத்துவ சேவைக் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

எதிர்வரும் மூன்றாம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள இக்குழுவினர், நவம்பர் மாதம் ஒன்பதாம் திகதி வரை தங்கியிருக்கவுள்ளனர். அக்காலப்பகுதியில் குடாநாட்டுக்கு விஜயம் செய்து இலவச மருத்துவ சேவைகளை வழங்கவுள்ளனர்.

யாழ்ப்பாணம் கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் தங்கள் சேவையை வழங்கவுள்ள இந்தக் குழுவில், 18 பேர் அங்கம் வகிக்கினறனர்

இக்குழு, இலங்கைக்கு மூன்றாவது தடவையாக விஜயம் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## படையினரால் கொல்லப்பட்ட 600 பேருக்கு நினைவுத்தூபி

### செம்மணியில் பெரியளவில் அமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாண மாவட்டத்தினைப் பாதுகாப்புப் படையினர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருந்த காலப்பகுதியில் படையினரால் கைதாகி படுகொலை செய்யப்பட்ட கிருஷாந்தி உட்பட 600 பேரின் நினைவாக செம்மணியில் மாபெரும் நினைவுத்தூபியொன்று விரைவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த நினைவுத்தூபியை அமைப்பதற்கான ஆரம்பப்பணிகளை செம்மணி நினைவு செயற்பாட்டு நிறுவனம் எனும் புதிய அமைப்பொன்று மேற்கொண்டு வருகின்றது.



மூதூர்ப் பகுதியில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்ட முறுகல் நிலை தொடர்பாக ஆராய இடம்பெற்ற சந்திப்பில் புலிகள் தரப்பு, முஸ்லிம் தரப்பு பிரதிநிதிகளையும், பொலிஸார் மற்றும் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதியையும் படங்களில் காணலாம்.

## அரசாங்கத்தைக் கவிழ்ப்பது குறித்து ஜே.வி.பியுடன் ஜனாதிபதி ஆராய்வு!

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை பதவி கவிழ்ப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கும் ஜே.வி.பி.யினருக்கும் இடையில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற பேச்சுவார்த்தை இரண்டரை மணிநேரம் இடம்பெற்றது.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையின் போது அரசாங்கத்தை பதவி கவிழ்த்து புதிய அரசாங்கத்தை உருவாக்குவது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது என்று பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

இந்தப் பேச்சுக்களின்போது தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பாக ஆராயப்பட்டதாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திசாநாயக்க கூறினார்.

## நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு நெதர்லாந்து 38 லட்சம் யூரோ நிதியுதவி!

நாட்டின் சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், பொருளாதார அபிவிருத்திக்கான மூன்று திட்டங்களில் - 38 லட்சம் யூரோ நிதி உதவியை நெதர்லாந்து அரசாங்கம் வழங்கவிருக்கின்றது.

அபிவிருத்தி, ஒத்துழைப்பிற்கான அமைச்சர் பென்ட்வூர்பிள்ளே வெண்டகொலண்ட், நவம்பர் 3 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் ஒன்று மேற்கொள்ளும்போது, திருகோணமலையில் இதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இருக்கின்றார்.

நெதர்லாந்து தூதரகம் விடுத்துள்ள பத்திரிகைச் செய்தியில் மேலும் -

பொருளாதார அமைச்சரின் இலங்கை விஜயத்தின் மூலம், தற்சமயம் மேற்கொள்ளப்படும் சமாதான நடவடிக்கைகளுக்கு தீவிர ஆதரவு தெரிவிக்கப்படும்.

அடுத்த மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதிவரை, நெதர்லாந்து அமைச்சர் இலங்கையில் தங்கியிருப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.நா. பெண் பிரதிநிதி மீது பாலியல் பலாத்கார முயற்சி!

### இராணுவ அதிகாரிகள் இருவர் கைது

(கண்டி)

ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதியான பெண் ஒருவர் மீது பாலியல் பலாத்காரம் மேற்கொள்ள முயன்ற இராணுவ மேஜர் தர அதிகாரி ஒருவரும், கப்டன் தரத்திலுள்ள ஒருவரும் ́கைதுசெய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு கண்டியிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி தங்கியிருந்த விருந்தக அறைக்குச் சென்ற இராணுவத்தினரே இந்தப் பாலியல் பலாத்கார முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தையடுத்து கண்டிப் பொலிஸார் இவர்கள் இருவரையும் கைதுசெய்து நேற்று கண்டி மேலதிக நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

நீதிவான் இவர்கள் இருவரையும் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (01)

### மெய்வல்லுநர் சங்க பொதுக் கூட்டம்

(ஆழியவளை)

கிளிநொச்சி மாவட்ட மெய்வல்லுநர் சங்கப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 10 மணிக்கு கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கழகத்தில் பதிவு செய்ய விரும்பும் விளையாட்டுக கழகங்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் மெய்வல்லுநர் சங்க செயலாளர் க.கனகராசா மாவட்டச் செயலகம் கிளிநொச்சி எனும் முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் கேட்டுள்ளார். (122)

## இரத்மலானை கோஷ்டி மோதலில் அதிரடிப்படை அதிகாரி ஒருவர் பலி!

### சந்தேக நபர்கள் இருவர் பொலிஸாரால் கைது

இரத்மலானை - அத்துருக்கிரிய பகுதியில் இரு கோஷ்டிகளுக்கிடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக, விசேட அதிரடிப்படை அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.

அம்பாறை - கோம்பகஸ்தலாவ படைமுகாமில் பணியாற்றும், அதிரடிப்படை அதிகாரியான நளின் குமார என்பவரே கொல்லப்பட்டவராவார்.

மோதல் தொடர்பாக, கல்ஹிசைப் பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்வதற்காக பொலிஸ் அதிகாரி சென்ற வேளையிலேயே அவர் கொலை செய்யப்பட்டார்.

இந்தக்கொலை தொடர்பாக, இரண்டு சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## கூட்டுப்படைகளின் தளபதியாக மேஜர் ஜெனரல் ஓயனல் பலகல்ல!

### ஜனாதிபதி சந்திரிகாவால் நியமனம்

(கொழும்பு)

இராணுவத் தளபதி லெப்ரினனட் ஜெனரல் லயனல் பலகல்ல நேற்று முதல் கூட்டுப்படைகளின் தளதியாகவும், பொறுப்பேற்றுள்ளதாக், பாதுகாப்பு அமைச்சின் செயலகம் தெரிவித்துள்ளது.

இராணுவத்தின் வரலாற்றில் இராணுவத் தளபதி ஒருவர், கூட்டுப் படைத் தளபதிப் பொறுப்பையும் ஏற்பது இதுவே முதல் தடவையாகும்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் இந்தப் பதவி நிரப்பப்படாமல் வெற்றிடமாக இருந்துவந்தது.

இதன் அடிப்படையில், நேற்று முதல் இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸ் ஆகியவற்றுக்கு லயனல் பலகல்ல தலைவராக இருப்பர்.

இவருக்கான இந்த நியமனத்தை ஜனாதிபதி சந்திகாவே வழங்கியதாகத் தெரியவருகிறது. (01)

# தொழிலுக்குச் செல்லும் மீனவர்களிடம் தொடர்ந்தும் படையினர் பாஸ் சோதனை

## பாதுகாப்பு செயலாளரின் உத்தரவு அமுலாகவில்லை

பருத்தித்துறையில் தொழிலுக்குச் செல்லும் மீனவர்களுக்கான பாஸ் அனுமதியினை, தற்போதும் படையினரே மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் தொழிலுக்குச் சென்ற மீனவர்களுக்கான பாஸ் அனுமதியினை, வழமை போன்று மூன்று இராணுவச் சோதனைச் சாவடிகளிலும் வைத்து, இராணுவத்தினர் தமது பாஸ் அனுமதியினை வழங்கியதனைக் காணமுடிந்தது.

இதேவேளை, தொழிலுக்குச் செல்லும் மீனவர்களுக்கான பாஸ் அனுமதியினை, இனிவரும் காலத்தில் பொலிஸாரே வழங்குவர் எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தம்மிடம் தெரிவித்ததாகத் தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆனால், பருத்தித்துறை பொலிஸார் அனுமதி வழங்கும் இடங்களில், ரோந்து நடவடிக்கையில் மட்டும் ஈடுபட்டதனை அவதானிக்க முடிந்தது.

இதனிடையே நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆர்ப்பாட்ட பேரணியில் கலந்துகொண்ட மீனவர்கள் சிலர், படையினரால் அச்சுறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடற்கரை வீதியிலுள்ள இராணுவச் சோதனைச் சாவடியில் வைத்துப் பருத்தித்துறை உயர்பாதுகாப்பு வலயத்தில் இருக்கும் மீனவர் சிலர் இவ்வாறு மிரட்டப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. (202)

## மிதிவெடியில் சிக்கி இளைஞன் காயம்

கோப்பாய் பகுதியில் மிதிவெடியில் சிக்கி இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை கோப்பாய் கிழக்கில் நடைபெற்ற சம்பவத்தில் - யேசுவாமி ஜோன்சன் (வயது 27) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

வீட்டு வளவிலிருந்த மரத்தைத் தறித்துக்கொண்டிருந்தவேளை, திடீரென மிதிவெடி வெடித்ததில் இவர் படுகாயமடைந்துள்ளார்.

# மாவீரர் கலாத்தனின் நினைவாக மருதங்கேணியில் நூலகம் அமைப்பு

மாவீரர் லெப்.கேணல் கலாத்தன் நினைவாக, மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் நூலகம் ஒன்று, கடந்த செவ்வாய்க் கிழமை திறந்துவைக்கப்பட்டது.

வடமராட்சி கல்விக்கழகப் பொறுப்பாளர் தாயகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தேசியக் கொடியினைக் கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் ஏற்றினார். படிப்பகத்திற்கான பெயர்ப் பலகையினைக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் திரை நீக்கம் செய்து வைத்தார். கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை - படிப்பகத்தின் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

சுமார் 10 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்தப் படிப்பகத்தினை, மாவீரர் கலாத்தனின் குடும்பத்தினர் ஏற்றுக்கொண்டு, அமைத்துக் கொடுத்தனர்.

இந்த நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம், பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன் மற்றும் பாடசாலை அதிபர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (122)

## ஆனந்தபுரம் கிராமத்தில்

# கல்வியைத் தொடரமுடியாமல் 150 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள்

(ஆழியவளை)

இருபாலை கிழக்கு - ஆனந்தபுரம் பகுதியைச் சேர்ந்த சுமார் 150 இற்கு மேற்பட்ட சிறுவர்கள், அடிப்படைக் கல்வியினைத் தொடரமுடியாதநிலையில் வாழந்து வருவதாக, அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதியில் கிழக்கு அரியாலை, கொழும்புத்துறை மற்றும் தீவுப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தும், புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் மீளக்குடியேற முடியாதநிலையில், இந்தக் கிராமத்தில் தங்கியுள்ள 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களே இவ்வாறு அடிப்படைக் கல்வியினைத் தொடரமுடியாது துன்பப்பட்டு வருகின்றனர்.

இந்த விடயம் குறித்து இப்பகுதி கிராம அலுவலர்கள் - பல தொண்டர் அமைப்புக்களுக்குச் சுட்டிக்காட்டியும், அவர்கள் பொருத்தமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் இந்தச் சிறார்களின் கல்வியும், எதிர்காலமும் பெரிதும் பாதிக்கப்படுகிறது. (122)

## வழிகாட்டல் கருத்தரங்கு

புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேச சனசமூக நிலையத்தினரால், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத்தோற்றும் மாணவர்களுக்கான, இலவச வழிகாட்டல் கருத்தரங்கு நடாத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டிலுள்ள முன்னணி ஆசிரியர் குழாத்தை ஒன்றிணைத்து, எதிர்வரும் 1 ஆம், 2 ஆம் திகதிகளில், காலை 9 மணி முதல் நண்பகல் 2 மணிவரை இந்தக் கருத்தரங்கு நடைபெற ஏற்பாடாகியுள்ளது என்றும், இந்த வழிகாட்டல் கருத்தரங்கில் பங்கு பற்றும் மாணவ, மாணவிகளிற்குக் கையேடுகளும் வழங்கப்படவுள்ளதாகவும், நிலையச் செயலாளர் தெரிவித்துள்ளார். (83)

# வடமராட்சி வலயமட்டத்தில் உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

வடமராட்சி வலயமட்டத்திலான 2003 ஆம் ஆண்டின் உதைபந்தாட்ட.இறுதிப்போட்டியும், பரிசளிப்பு விழாவும் கடந்த 22 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்குப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமை தாங்கினார். வலயக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

16 வயதுப் பிரிவுப் போட்டியில் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி - கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை அணியை 5:0 என்ற கோல்ரீதியில் வெற்றிகொண்டு, சம்பியன் கேடயத்தைத் தனதாக்கிக்கொண்டது.

இறுதிவரை விறுவிறுப்பாக நடந்த 18 வயதுப்பிரிவில் தேவரையாளி இந்துக்கல்லூரி அணி- நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியை 3:1 என்ற கோல் ரீதியில் வெற்றிகொண்டு, சம்பியன் கேடயத்தைத் தனதாக்கிக் கொண்டது.

கரவெட்டி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இப்போட்டிகளுக்கான வெற்றிக் கேடயங்களைத் தந்துதவியதாக - வடமராட்சி வலய உடற்கல்விப் பணிப்பாளர் வே.வல்லிபுரம் தனது நன்றியுரையில் தெரிவித்தார்.



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில், அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்ட ஆரம்ப அருவி சஞ்சிகையின் ஆய்வுரையை நிகழ்த்தும் - யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் ஞானகாந்தனைப் படத்தில் காணலாம்.

## சுற்றுலா விடுதிகள் பற்றிய விபரங்கள் திரட்டப்படுகின்றன


பிரதேச ரீதியாகவுள்ள சுற்றுலா விடுதிகள் அமைந்துள்ள இடம், விடுதிகள் அமைக்கக்கூடிய இடம் போன்ற விடயங்களை, வடக்கு - கிழக்கு மாகாண திட்டமிடல் செயலகம் - சகல பிரதேச செயலர்களையும் கோரியுள்ளது.

இது தொடர்பான விண்ணப்பப் படிவங்கள் யாழ்- அரச அதிபர் ஊடாக சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

## வாழ்க வளமுடன்

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### முதலாவது அகவையில்



பெயர் : பா.கிஷ்ணவாணி
முகவரி : ஒட்டங்கேணி வீதி, கச்சாய் றோட், கொடிகாமம்.

### இரண்டாவது அகவையில்



பெயர் : பி.சங்கீதன்
முகவரி : 112,பாலிநகர், வவுனிக்குளம்.

### இரண்டாவது அகவையில்



பெயர் : பி.திவ்யப்பிரியா
முகவரி : உச்சில் லேன், கரவெட்டி தெற்கு, கரவெட்டி.

### இரண்டாவது அகவையில்



பெயர் : த.அஜிதா
முகவரி : மிருசுவில் வடக்கு, மிருசுவில்

### ஐந்தாவது அகவையில்



பெயர் : ம.மயூரன்
முகவரி : கரவெட்டி வடக்கு, கரவெட்டி

### ஆறாவது அகவையில்




பெயர் : இ.வினோஜா
முகவரி : உண்டுவத்தை, அல்வாய்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்


# பூமி - உதைபந்து வடிவமா?

காலகாலமாக பூமி ஒரு கோளவடிவம் என விஞ்ஞானிகளால் கூறப்பட்டு வந்தது. ஆனால், தற்போது இது ஒரு உதைப்பந்து வடிவத்தில் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. செய்மதிகள் மூலம் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின்படி- பிளேட்டோ, கெப்லர், ஆகியோருடைய கருதுகோள்கள் உடைக்கப்பட்டுள்ளது. ஆனால், லியனாடோ டாவின்சியுடைய கருத்துப்படி - பூமி ஒரு பந்து வடிவமானது என்று அன்று கூறப்பட்டது. அந்த நேரத்தில் அவரை எல்லோரும் பழித்தார்கள். ஆனால், பலவருடங்கள் கழிந்தநிலையில், இதனை நம்பத்தலைப்பட்டிருக்கின்றார்கள். பல விஞ்ஞானிகளின் ஒன்று சேர்ந்த கருததுக்கள் இயற்கை என்ற சஞ்சிகையில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இது கூடுதலாக இந்தக் கருத்தையே மையப்படுத்துவதாகக் கொண்டுள்ளது. ஆனால், கேப்டவுன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜோர்ஜ் எலிஸ் என்ற விஞ்ஞானி இதனை மறுக்கின்றார். அவர் பூமிகோள வடிவமானது என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றார். பூமியினுடைய வடிவம் மாறுவதற்குக் கதிர்த்தொழிற்பாடு காரணமாக இருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றார்கள். ஆனால், இவை எல்லாவற்றுக்கும் ஒரே தீர்வாக, அமெரிக்காவின் பிளாஸ் என்ற செய்மதியானது தற்போது விண்வெளியில் ஆராய்ச்சி செய்துகொண்டு வருகின்றது. அது 2007 ஆம் ஆண்டு பூமியை அடையும்போது, இதற்கான விடை கிடைத்துவிடும் என விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.



# உச்சக்கட்ட செயற்கை அழகு

தற்போது லண்டனில் நடைபெறும் ஒரு கண்காட்சியில், முப்பரிமாண தோற்றத்தில் மொடல்களைக் காட்சிக்கு வைத்திருந்தார்கள். இப்படிப்பட்ட மொடல்களால் என்ன பயன் எனக் கேள்வி எழுப்பப்பட்டது.




அங்கு வைக்கப்பட்டிருந்த அதிகமான மொடல்களின் அழகு பிரமிப்பூட்டுவனவாக அமைந்திருந்தது. பலவேளைகளில், ஒரு உண்மையான பெண்ணின் உடல் அமைப்பு, உதடுத் தோற்றம் ஆகியவற்றிலும் பார்க்க, மொடல்கள் மிகவும் அழகாகத் தோற்றம் கொடுத்தன.

அழகு என்பதன் இலக்கைத் தாண்டி, மிகுந்த அழகாக அவை வடிவமைக்கப்பட்டிருந்தன.

இவற்றை ஆண்கள் வடிவமைத்திருந்தார்கள். இதனால், அழகைப்பற்றி அதிகம் உணர்ந்து அவற்றை வடிவமைத்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




# மயிலின் அழகு



மயிலின் தோகை - அழகுக்கு எடுத்துக்காட்டாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் நிறமூர்த்தங்கள் தான், வெவ்வேறு நிறக்கலவை உருவாவதற்குக் காரணமாக அமைந்ததெனக் கணிக்கப்பட்டது. ஆனால், விஞ்ஞானிகள் நுணுக்குக்காட்டிகள், இலத்திரன் நுணுக்குக்காட்டி மூலம் மயில் இறகை ஆராய்ந்து பார்த்தார்கள். ஒளிக்கதிர் - நிறப்பிரிகையின்போது, வெவ்வேறு நிறங்களைத் தோற்றுவிப்பது போன்று, தோகையின் ஒளியை சிதறல் செய்யும் அமைப்புக்கள் பல்வேறு நிறங்கள் உருவாவதற்குக் காரணமாக அமைந்திருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது.




# ஆதிகால முதுகெலும்புள்ள மிருகம்

அவுஸ்திரேலியாவில் ஆட்டு மந்தைகாரர் ஒருவர், மிகவும் தொன்மையான காலப்பகுதியில் வாழ்ந்ததாகக் கருதப்படும் முள்ளந்தண்டுடன் வாழ்ந்த விலங்கினத்தின் ஆரம்பகாலத்துப் படிமங்களைக் கண்டுபிடித்துள்ளார்.


"ரோஷ்பாகர்" என்னும் மந்தை வளர்ப்பவர் - தனது தோட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட படிமங்கள் (Fossile) அமைந்த கற்களை, 4 ஆண்டுகள் வரை தனது வீட்டின் முன்புறத்தில் தேடுவாரற்ற நிலையில் வைத்திருந்தார். விஞ்ஞானிகள் இவற்றை ஆராய்ந்தபோது, இவை 560 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட விலங்கினுடையதென அறியப்பட்டுள்ளது.

டாட்டர் கேலிங், இவற்றை ஆராய்ந்தபோது - முதுகெலும்புள்ள உயிரினம் வாழ்ந்தற்கான ஆதாரங்களை அறியமுடிந்ததாகத் தெரிவித்தார்.

# சூரிய சக்தியில் இயங்கும் வேகமான வாகனம்



சூரிய சக்தியில் இயங்கும் நூனா என்ற வாகனம், 2003 ஆண்டிற்கான - சூரிய சக்தியில் இயங்கும் வண்டிகளுக்கான பரிசைப் பெற்றுள்ளது. நெதர்லாந்தில் தயாரிக்கப்பட்ட இந்த வாகனம் - 3070 கிலோமீற்றர் தூரத்தை 30 மணித்தியாலங்கள் 54 நிமிடங்களில் கடந்தது. இது சூரியகலங்களைக் கொண்டு, வாகனங்களை உற்பத்தி




செய்யும் கம்பனிகளை உற்சாகப்படுத்தியுள்ளது. நூனா வாகனம் வடிவமைப்பிலும் - காற்றின் தடை இல்லாதது இயங்குவதற்கேற்ற முறையிலும் அமைக்கப்பட்டிருந்தது.

இந்த வண்டி பகலில் பிரயாணம் செய்தாலும், அதனுள் உள்ள சேமிப்புக் கலங்கள் - இரவில் பிரயாணம் செய்வதற்கு போதுமான சக்தியை சேமித்து வைத்துக்கொள்கிறது.


# உலகின் மிகவும் பழமையான அரிசி

கொரியாவில் தொல்பொருள் ஆய்வில் ஈடுபட்டவர்கள், 15,000 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்து அரிசியைக் கண்டுபிடித்தனர். நெல் உற்பத்தி 12,000 ஆண்டுகளுக்கு முன்பே சீனாவில் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது என்ற உண்மை தெரியவந்துள்ளது.

இந்த அரிசி மரபணுக்கள் இன்று காணப்படும் அரிசியில் இருந்து, மிகவும் மாறுபட்டு காணப்படுகிறது. இதன் வளர்ச்சியை அறிய விஞ்ஞானிகள் முறற்பட்டுள்ளார்கள்.



இன்று உலகின் மக்கள் தொகையின் அரைப்பங்கினர், அரிசியை தமது பிரதான உணவாகக் கொண்டுள்ளார்கள். 2002 ஆம் ஆண்டு 576,280,000 தொன் அரிசியை உற்பத்தி செய்ததாக அறியப்பட்டுள்ளது. தென்கொரிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த "லீ யங் யோர்", வூ யொஜூன் ஆகிய இருவரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



"சொரனி" என்ற கிராமத்தில் அகழ்வில் ஈடுபட்டிருந்தபோது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (radio aetive) ரேடியோ சக்தி எனப்படும் காலத்தை அறிவதற்கு உபயோகிக்கும் முறையில், இதன் ஆண்டுகள் கணிக்கப்பட்டுள்ளது.

மரபணுப் பரிசோதனை மூலம் தற்காலத்தில் காணப்படும் அரிசியிலிருந்து மிகவும் மாறுபட்டுள்ளதை காணமுடிந்தது. இதன்மூலம் அரிசியின் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை அறிந்துகொள்ள முடியும் எனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆசியாவின் கற்கால மனிதர்களின் ஆய்விலும், இந்த அரிசி கண்டுபிடிக்கப்பட்ட இடம் முக்கியமானதெனக் கருதப்படுகின்றது.

# தேனோ தேனோ

தேனுக்கு பேர் போனது பிரான்ஸ் நாடு. அங்கே இருக்கின்ற புரோவின்ஸ் என்ற இடத்தில் 400 தேன்கூடுகள் வருடாவருடம் அளவுக்கதிகமான தேனைக் கொடுத்துக்கொண்டு வந்தன. ஆனால், இந்த வருடம் 40 தேன்கூடுகள் மட்டுமே தேனைக் கொடுத்திருக்கின்றன. காரணம் - அசாதாரண காலநிலை என்று கூறப்படுகின்றது. மொத்தமாகப் பிரான்சில் 1.3 மில்லியன் தேன்கூடுகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. குளிர்காலங்களில் பெரும்பாலான தேனீக்கள் இறக்கின்றன. 10 இக்கு 6 என்ற ரீதியில் தேனீக்கள் இறப்பதாகக் கூறப்படுகிறது. அதேவேளை, வைரசுக்களின் தாக்கம் காரணமாகவும் தேனீக்கள் இறக்கின்றன. இதன் காரணமாக தேனுக்கு, அங்கே தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. விலையும் அதிகரித்துக் காணப்படுகிறது. மாவீரன் நெப்போலியன் காலத்திலிருந்தே, தேனுக்குப் பிரான்ஸ் நாடு பெயர்பெற்றதாகத்தான் இருக்கின்றது. நெப்போலியனுக்கு தேனீக்கள் என்றால் உயிர். அதன் காரணமாகத்தான் அவனுடைய காலத்திலிருந்தே, ராணித்தேனீயும் மற்றத் தேனீக்களும் பிரான்ஸ் நாட்டில் ஒரு மதிப்புமிக்கனவாகக் காணப்படுகின்றன.



# யானைகளின் கொலை



தென்னாபிரிக்கா, நமீபியா, பொஸ்வானா ஆகிய ஆபிரிக்க நாடுகள் - திருட்டுத்தனமாக யானைகளை வேட்டையாடித் தந்தங்களைச் சேகரித்தவர்களிடம் இருநது பறிமுதல் செய்யப்பட்ட தந்தங்களை, அந்நாட்டு அரசுகளுக்கு விற்பனை செய்வதற்கான அனுமதியை - பேராபத்தில் சிக்கியுள்ள மிருகங்கள் தொடர்பான அமைப்பு அனுமதி கொடுத்திருந்தது. இதன்மூலம் 50 தொன் அளவான யானைத் தந்தத்தை விற்க அந்நாடுகள் முன்வந்துள்ளன. இதனால் கள்ளத்தனமாகத் தந்தங்களை வேட்டையாடுபவர்கள், மீண்டும் தமது தொழிலை ஆரம்பிக்க வாய்ப்பளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


மேலும் 20 ஆண்டுகளின் யானைகள் அழிவின் எல்லைக்குச் சென்ற உயிரினமாக மாறலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது. மேலும் 1980 ஆம் ஆண்டு, 1 மில்லியனாக இருந்த யானைகளின் எண்ணிக்கை, இன்று 500,000 ஆகக் குறைந்துள்ளது.

# கொன்கோட் தொழில்நுட்பத்தில் ஒரு முன்னோடி

கொன்கோட்டின் வடிவமைப்பும், கட்டுமானமும் நம்பமுடியாத வெற்றியாகவே உள்ளது.

இந்தக் கொன்கோட் விமானம் ஒலியைவிட இருமடங்கு வேகத்தில் செல்லும் ஆற்றல் கொண்டுள்ளது. துப்பாக்கி குண்டொன்று செல்லும் வேகத்திற்கு நிகரான வேகத்தில் செல்லும் ஆற்றல் உடையது.

கொன்கோட் அண்மையில் தனது இறுதிப்பயணத்தை முடித்துக்கொண்டது.



100 பயணிகளை மாத்திரமே எடுத்தச் செல்லக்கூடியதாக வடிவமைக்கப்பட்ட இந்த கொன்கோட் விமானம், அதிக ஆய்வுகளுக்கும் பரிசோதனைகளுக்கும் பின் பறக்க விடப்பட்டது.

உயரத்தில் விமானமொன்று பறக்கும்போது, காற்றினால் அதன் செட்டைகளுக்கு ஏற்படும் எதிர்ப்பு விசையும், விமானமொன்று தரையில் இருந்து புறப்படும்போது, தரையில் இருந்து சிறிது உயரத்தில் ஏற்படும் காற்றின் தாக்கமும் மாறுபட்டிருக்கும்.


இவற்றிற்கு மேலாக உயரத்தில் வேகமாக பறக்கும்போது, விமானத்தை ஆகாயத்தில் வைத்திருப்பதற்கான (Lift) மேலுயர்த்தும் வலு கூடுதலாக இருக்கும். இதேநேரத்தில் விமானம் தரையை அண்மிக்கும்போதும், வேகத்தைக் குறைக்கும்போதும் விமானம் குறைவான மேலுயர்த்தும் சக்தியில் விழுந்துவிடும் வாய்ப்பு உண்டாகும். கொன்கோட் விமானத்தின் செட்டைகள் முக்கோண வடிவில் (DELTH WINGS) அமைந்திருப்பது - அதன் சிறந்து வடிவமைப்பதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்

1950 ஆம் ஆண்டுகளில் குண்டு வீச்சு விமானங்கள் இந்த முறையில் வடிவமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அடுத்து, கொன்கோட்டின் இயந்திரத்தின் வடிவமைப்பு குறிப்பிடவேண்டியதாகும். கொன்கோட்டின் தன்னியக்கக் கட்டுப்பாடு, அதன் முக்கிய அம்சமாகும்.

இதில் இரு தன்னியக்கமுறையில் அமைந்த (AUTO PILOT) விமானம் செலுத்தும் அமைப்புக்கள் ஒன்றிணைந்து, விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில், அது செல்லவேண்டிய பாதையைக் கவனித்து விடுகின்றன. மேலும் தன்னியக்கக் கட்டுப்பாட்டின்மூலம், விமானம் ஆகாயத்தில் பறந்து கொண்டிருக்கும்போது, அதன் சமநிலை பேணப்படுகிறது.

1973 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30 ஆம் திகதி - சூரிய கிரகணம் ஒன்று நடைபெற்ற நேரத்தில், லாஷ் பல்மாஷ் என்ற இடத்திலிருந்து புறப்பட்டு, கிரகணத்தின் அசைவுடன் கொன்கோட்டும் வேகமாகச் சென்று, அதில் பிரயாணம் செய்த அமெரிக்க, பிரான்ஸ், பிரித்தானிய விஞ்ஞானிகளுக்கு முழுமையான ஆய்வை மேற்கொள்ள உதவியாக அமைந்தது.

# முற்காலத்தில் வாழ்ந்த மீனினம்



பல் இல்லாத மீன் இனமொன்று பனிக்கட்டியால் பூமி சூழப்பட்ட காலத்தில் வாழ்ந்ததாகக் கருதப்பட்டது. இம்மீனினத்தை சூழல் பாதுகாப்பைச் சேர்ந்த அமைப்பினர் தேடி வருகின்றனர். லம்பிரேய் என்ற இனத்தைச் சேர்ந்த இந்த மீன் இனம்-முற்றாக அருகிவிட்டதாக ஸ்கொட்டிஸ் இயற்கை பிறப்புரிமை தெரிவித்துள்ளது.

இவ்வினம் தனது இரையை விசையுடன் உறிஞ்சி உள்ளிளுத்து கொள்ளும் ஆற்றல் கொண்டது. டைனோசர் பூமியில் வாழ்ந்த காலத்திற்கு முன், இவ்வினம் இருந்ததாகப் படிமங்கள் (FOSSILE) மூலம் தெரியவந்துள்ளது.


இவற்றிற்கு மீனில் காணப்படும் செதில்கள், அலகு, பூக்கள் (Gills), முள்ளுள்ள எலும்புக்கூடு எவையும் காணப்படவில்லை. ஆனால், விலாங்கு மீனை ஒத்திருந்தது. அத்துடன், இரை உறுஞ்சி உள்ளே எடுத்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பாக அமைந்திருந்தது.

ரோமானிய காலத்தில் இவ்வகை மீன் - அவர்களின் முக்கிய உணவாக அமைந்திருந்தது. ஆனாலும், மனிதனின் குறுக்கீடுகளால, இயற்கை அசுத்துப்படுத்தப்பட்டமையும் இம் மீனினம் அருகிப்போவதற்குக் காரணமாக அமைந்தது.

# திரை விமர்சனம்

## இயற்கை

கடலும் கடல் சார்ந்த இடங்களும் பார்க்கும் போதே மனதைக் கொள்ளையடிக்கும். அங்கே ஒரு காதலையும், அதன் வலிகளையும் சொல்லி, பார்ப்பவர் மனங்களைக் கொள்ளையடித்திருக்கின்றார்கள். நல்ல கதை. நல்ல இயக்குநர். உண்மையிலேயே பாராட்டப் படவேண்டிய குழு இது. கப்பல் சிப்பந்திகளுக்கும், கரையோர மனிதர்களுக்குமிடையே இருக்கின்ற தொடர்பு இந்தப் படத்தில் பிரவாகமாக வெளிப்பட்டிருக்கின்றது. அந்தமான் தீவில் விடுதி நடத்திவரும் சீமாதிஸ்வானின் உறவுப்பெண் குட்டிராதிகா. கப்பல் மாலுமியான அருண்குமாரிடம் மனதைப் பறிகொடுத்துவிடுகின்றார். பின்பு காதலனின் கப்பல் போய்விட, காதலனுக்காக ஏங்குகின்றார். இவரை இன்னொரு கப்பல் சிப்பந்தியான ஷாம் பார்க்கின்றார். அப்போது அவருடைய காதலை ஏற்க மறுத்த ராதிகா, தன்னுடைய காதலன் அருண்குமார் பற்றிச் செல்கின்றார். ஆனால், ஷாம் போனவன் - வரமாட்டான், இருப்பனை நேசி என்று கூறுகின்றார்.




ஆனால், ராதிகா போனவன் - வரமாட்டன் என்றாலும், பரவாயில்லை. நான் இப்படியே இருப்பேன் என்கிறார். ஷாமின் அற்புதமான அடக்கமான நடிப்பு. ஒளிப்பதிவாளர் ஏகாம்பரம் காட்சிகளை மிகவும் சிறப்பாகச் சுட்டுத்தள்ளியிருக்கின்றார். கன்னிப்பட இயக்குநர் ஜனநாதன் ஜனங்களின் நாதன் ஆகுவார் என்பதில் ஐயமில்லை. வித்தியாசாகரின் வித்தியாசமான இசை - உண்மையில் மெல்லிசை.

இயற்கை - செயற்கையற்ற படம்.

*சுதர்ஷி.*

# ரஷ்யாவின் சூழல் சிந்தனை



ரஷ்யாவின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள ஆட்டிகப் பிரதேசத்தைத் துப்புரவு செய்யும் பணியில் ரஷ்யா ஈடுபடுவதற்குத் தீர்மானித்துள்ளது. இத்திட்டத்தின் பிரகாரம் கைவிடப்பட்ட இராணுவத் தளங்களைப் பாதுகாப்புள்ளதாக மாற்றுதல், கடலில் சிந்திய எண்ணைப் படிவங்களை 'அல்கா' எனப்படும் கடற்தாவரங்களின் மூலம், கடல் நிரிலிருந்து அகற்றுவதற்கான சாத்தியங்களை ஆராய்தல், சூழலின் பாதுகாப்பு தொடர்பாக ஆதிவாசிக் குடிகளுக்கு கற்றுக்கொடுத்தல் போன்றவற்றில் 'ஆட்டிக' தற்போது பலவழிகளில் அசுத்தமாக்கப்பட்டு வருகின்றது. போர்க் காலங்களில் கைவிடப்பட்ட நஞ்சுத்தன்மைகொண்ட துப்பாக்கி, எறிகணைகள் ஆகியவற்றின் மீதமாக உள்ள உலோகப் பகுதிகள், ரேடியோக் கதிர்களை வீசக்கூடிய பொருட்கள், தொழிற்சாலைகளிலிருந்து எஞ்சிய இரசாயணப் பொருட்கள் ஆகியன சிலவாகும்.

உலகின் மற்ற எந்தக் கரையோரப்பகுதிகளிலும் பார்க்க, ரஷ்யாவின் கடற்கரைகள் மிகுந்த அளவில் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறது.

மேற்கத்தைய அமைப்புகளும், சர்வதேச அரசுகளும் பல சூழல்பாதுகாப்புத் தொடர்பான அமைப்புகளும் இம்முயற்சிக்கு நிதியுதவி அளிப்பதற்கு முன்வந்துள்ளன.

பல அணுஉலைகள் அகற்றப்பட்டும், அவை அழிவைத்தரக்கூடிய நிலையில் காணப்படுகின்றன. எண்ணை ஆய்வுகள் நடத்தப்பட்ட இடங்களில் காணப்படும் ஆயுதங்கள், நிக்கல் என்ற உலோகத்தை அகழ்ந்தெடுப்பதற்குப் பாவித்த இடங்களால் - அங்கு வாழும் ஆதிக்குடிகள் மிகுந்த ஆபத்துக்களை எதிர்நோக்கி வாழ்வார்கள்.

சில தாவரங்களை அப்பகுதியில் பயிரிடுவதன்மூலம், எண்ணைப் படிவுகளை அகற்றவும் முயற்சி எடுக்கப்பட்டுவருகின்றது. அத்தோடு, மிகுந்த குளிரும், பனிக்கட்டிகளும் காணப்படுவதால், அழிவுகள் நீண்டகாலத்திற்கு மாற்றங்கள் எதுவுமின்றி காணப்படுகின்றது. உலகின் சூழல் மாற்றத்திற்கு ஆட்டிக் ஆரம்ப எச்சரிக்கையைத் தருகின்றதா எனபதுடன், உலகின் மற்றப்பகுதிகளைவிட இருமடங்காக ஆட்டிக் மாறிக்கொண்டும்வருகின்றது.

# வாரம் ஒரு யோகாசனம்

## பாகாசனம்

பாகா என்றால் கொக்கு என்று பொருள். கொக்கு நீரில் நடப்பது போன்று தோற்றமளிப்பதால், பாகாசனம் என்று இவ்வாசனத்தைச் சொல்லப்படுகிறது. விரிப்பின் மீது இரு கைகளையும் ஊன்றி, கைகளின் மீது இரு கால்களையும் பதிக்கவேண்டும் . உடல் கனம் முழுவதும் கைகளின் மீது சமநிலையில் தாங்கியிக்கவேண்டும். முதல் ஒரு நிமிடம் போதும் , பின்பு மூன்று நிமிடங்கள் போதுமானது.



### நன்மைகள்

பாகாசனத்தால் கைகள் அதிகமாக வலுப்பெறும். வயிறு உறுதியடையும். ஆண்களைவிட பெண்களுக்கே அதிக நன்மைகளுண்டு . வயிறு சம்பந்தமான எந்தக் கோளாறும் இருக்காது. இருந்தாலும் குணமாகும். சுகப் பிரசவம் உண்டாகும். பிரசவவலி குறையும் ஞாபகசக்தி அதிகமாகும். கண்பார்வை பிரகாசிக்கும். கர்ப்பம் தரித்த பெண்கள் இப்பயிற்சியைச் செய்யக்கூடாது. கர்ப்பம் தரிப்பதற்கு முன்பும், பிரசவமான மூன்று மாதங்களின் பின்பும் செய்யலாம். கராத்தே, குத்துச் சண்டை வீரர்களுக்கு இப்பயிற்சி அதிக பலனைக் கொடுக்கும்.

*தருபவர் - மா.மகாநேசன், கல்லுவம்.*

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம்தம்*
*மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

### சந்திரிகாவின் தந்திரங்கள்

தீர்க்கதரிசன அரசியல் அணுகுமுறைத்திறனோ, தொலைநோக்குச் சிந்தனையுடன் கூடிய கொள்கைகளோ இல்லாத, வெறுமனே அதிகார அகங்காரமும், பதவிப்பற்றும், சுயநலநோக்கும் கொண்ட ஒரு ஜனாதிபதியாகவே சந்திரிகா தன்னைத் தொடர்ந்து இனம்காட்டி வருகிறார்.

அவரது செயற்பாடுகள் அனைத்திலும், ராஜதந்திர முதிர்ச்சியற்ற தன்மையின் வெளிப்பாடே தெரிகிறது. அவரது பேச்சுக்கள், அறிக்கைகள் எல்லாவற்றிலும் நிதானமற்ற அவசரத் தன்மையையும், கோபம், வெறுப்பு, சீற்றம் என பன்முகப்பட்ட சராசரி மனித உணர்வுகளின் அப்பட்டமான பிரதிபலிப்பையே உணரமுடிகிறது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒரு ஜனாதிபதிக்கு இருக்க வேண்டிய ராஜதந்திர ஆளுமையை இந்த ஏழாண்டு கால பதவிக்காலத்தில், அவர் தனக்கு உருவாக்கிக் கொள்ளவில்லை என்பதை அரசியல் அறிந்த அனைவரும் அறிவர்.

90 களின் மத்தியில் அவருக்கு கிடைத்த அபரிதமான மக்கள் ஆதரவுக்கு, அவரது அரசியல் ஆளுமைத்திறனோ, அனுபவ ஆற்றலோ காரணமல்ல. அதுவரை 17 ஆண்டு காலம் சிறிலங்காவை ஆண்ட ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான அரசின் மீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பும், கோபமும், நம்பிக்கையின்மையுமே காரணமாகும்.

அது மட்டுமல்ல அவர் அப்போது போட்டுக் கொண்ட சமாதானத் தேவதை வேடமும், கொலையுண்ட கலைஞர் - நடிகர் விஜயகுமாரணதுங்கவின் பரிதாபத்திற்குரிய விதவை மனைவி என்ற அநுதாபமும் மக்களை அவருக்கு ஆதரவளிக்க வைத்தது.

எந்தவித அரசியல் முன்னனுபவம் ஏதுமற்ற நிலையில், பாரம்பரிய அரசியல் பெருமைகளை மட்டும் சிங்கள, பௌத்த - மக்களிடையே வாக்குப் பெறுவதற்கான மூலதனமாக்கி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட போது, சந்திரிகாவுக்கு இருந்த அரசியல் தெளிவின்மை அவரது ஆட்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் அவரது செயற்பாடுகள் மூலம் வெளிப்படவே செய்தது.

ஆரம்பத்தில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்தபோது, மக்களுக்கு அவர்மேலிருந்த நம்பிக்கை பேச்சுவார்த்தை நகர்வுகளில் அவர் காட்டிய நேர்மையின்மையையடுத்து மெல்ல மெல்ல தேய ஆரம்பித்தது.

இனப் பிரச்சினையை அவர் கையாண்ட விதம், அதிகாரப் பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு என்று தொடர்ந்து தமிழ் மக்களையும், சர்வதேசத்தையும் அவர் "பேய்க் காட்டி" "காலம்கடத்திய தந்திரம்", போரைத் தீவிரப்படுத்தி, ஆரம்பத்தில் கிடைத்த கள வெற்றிகளை அதன் நிச்சயத் தன்மையை சரியாக மதிப்பீடு செய்யும் திறனற்று - அளவுக்கதிகமாக பிரச்சாரம் செய்த பலவீனம், தமிழ் மக்களை வந்தேறு குடிகள் என்று உலகறிய அவமதித்த அகங்காரம், "சமாதானத்திற்கான யுத்தம்" என்று பிரகடனம் செய்து, முப்படைத்தளபதி என்ற பதவியின் அடிப்படையில் தூரநோக்கு சிந்தனையற்று போரை முன்னெடுத்து, நாட்டின் முழு வளத்தையும் அதற்கு பலியாக்கி அவிவேகம் அனைத்தும் அவரது ராஜதந்திர - ராணுவதந்திர - தோல்விகளுக்கு எடுத்துக் காட்டேயாகும்.

கடந்த தேர்தலில் மக்கள் அவரது தலைமையிலான பொ.ஐ.முன்னணியை நிராகரித்தபோதும், அவர் தனது தவறுகளை உணரும் திறனற்றவராக, தொடர்ந்தும் தனது நிறைவேற்று அதிகார வலுவை பயன்படுத்தி அரசையும் ஏனைய தனது அபிலாஷைகளுக்கு முரணான அனைத்தையும் அச்சுறுத்தி வருவதுதான் மோசமான செயற்பாடாகும்.

குறிப்பாக சமாதான நகர்வுகளுக்கு அவர் போடும் முட்டுக்கட்டைகள் உலகறிந்த விடயமே...

அரசாங்கத்தை எதிர்ப்பது என்பது சாதாரணமான எதிர்க்கட்சிக் குணாம்சம்தான். ஆனால் அரசை எதிர்க்க வேண்டுமென்பதற்காக, தேசிய நலனுடன் சம்பந்தப்பட்ட சமாதான முயற்சிகளுக்கும் இடையூறு செய்து, குழப்ப முனைவதை, அமைதியை விரும்பும் எவரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

ஆயிரம் பொய்யைச் சொல்லியும் ஆட்சியைக் கவிழ் - சமாதானத்தைக் குழப்பு என்பதுதான் சந்திரிகாவின் தாரக மந்திரம் போலும்...

உண்மையும், ஆதாரமுமற்ற விடுதலைப்புலிகளின் ஆயுதக் கப்பல் விவகாரத்தில், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை இணைத்து, குற்றம் சாட்டி, குழுவின் தலைவர் ரெலவ்சனை பதவி விலகுமாறு நோர்வே அரசுக்கு சந்திரிகா கடிதம் எழுதியதுடன் போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் உத்தரவுகளை புறக்கணிக்கும்படி முப்படைக்கும் உத்தரவிட்டுள்ள சந்திரிகா இதன் மூலம் எதனைச் சாதிக்க நினைக்கின்றார் என்பதுதான் கவனிக்க வேண்டிய விடயமாகும்.

ஆட்சியைக் கவிழ்க்க காரணம் தேடுகிறாரா?
சமாதானத்தை குழப்ப சதி செய்கிறாரா?
போரை ஆரம்பிக்க திட்டமிடுகிறாரா?

எதுவானாலும் "அவதந்திரம் தனக்கந்திரம்" என்ற பழமொழியின் நிலையினையே அவர் எதிர்கொள்ளப்போகிறார் என்பது மட்டும் உறுதி.

## நாடும் நடப்பும்




### பளை அரச அதிபர் பிரிவில்

## படையினரின் உயர் பாதுகாப்பு வலயங்களால் 830 குடும்பங்கள் மீளக்குடியமர முடியாதநிலை

(பளை)

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் மேற்குப்பகுதியில் உள்ள வேம்பொடுகேணி, இத்தாவில் மற்றும் இந்திரபுரம் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 800 இற்கும் அதிகமான குடும்பங்கள் இராணுவ உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக மீளக் குடியமர முடியாது, அகதி வாழ்க்கை வாழ்ந்து அல்லல்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1999 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதிகளில் ஆனையிறவுப் படைத்தளத்தை படையினர் மீளக் கைப்பற்றும் நடவடிக்கை காரணமாக தத்தமது கிராமங்களில் இருந்து வெளியேறிய மக்களே, மீளக் குடியமர முடியாது அவதிப்படுகின்றனர்.

இதேவேளை, வேம்பொடுகேணி மற்றும் இத்தாவில் பகுதிகளில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் மீளக்குடியமர்ந்துள்ள சில குடும்பங்கள் அச்சம் காரணமாக இரவு வேளைகளில் அப்பகுதிகளில் இருந்து வெளியேறி, பளை நகர்ப் பகுதிகளில் தங்கி வருகின்றனர். (122)

## முறைப்பாட்டுக்கான விண்ணப்பப் படிவங்கள் மூன்று பிரதிகளில் சமர்ப்பிக்கப்படவேண்டும்

### நெல்லியடி பொலிஸார் வலியுறுத்து

(மன்னார்)

பொலிஸ் முறைப்பாட்டிற்கான விண்ணப்பப் படிவங்கள் மூன்று பிரதிகளில் தட்டச்சு செய்து, முறைப்பாட்டாளர்கள் சமர்ப்பிப்பதன் மூலமே நெல்லியடிப் பொலிஸ் நிலையம் சம்பந்தப்பட்டவர்களின் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் முறைப்பாட்டிற்கான விண்ணப்பப்படிவங்கள் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ்மா அதிபரினால் அனுப்பி வைக்கப்பட்டதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளியாகின.

இது சம்பந்தமாக கரவெட்டிப் பிரதேச செயலர் மட்டத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் வினவப்பட்டபோது, அங்கு சமுகமளித்திருந்த பொலிஸ் நிலைய உத்தியோகத்தர், குறிப்பிட்ட விண்ணப்பப்படிவங்கள் தமக்குக் கிடைக்கவில்லை என மறுத்துள்ளார்.

மேலும், முறைப்பாட்டாளர்கள் முறைப்பாடுகளைத் தாமாகவே தட்டச்சு செய்துவருவதாகவும், தாம் அப்படிக் கோரவில்லை எனவும் கூறியுள்ளார்.

வறிய குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு, இதுவரை கடைப்பிடித்துவரும் முறை வீண் அலைச்சலையும், பொருளாதார நெருக்கடியையும் உண்டுபண்ணுமெனப் பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக, முறைப்பாட்டாளர்களின் விண்ணப்பங்களை தமிழில் நிரப்புவதற்கும், கையெழுத்து பிரதிகளை ஏற்றுக் கொள்வதற்கும் உடன் நடவடிக்கை எடுப்பதாக பொலிஸ் அதிகாரி கூறியுள்ளார்.

## புலிகளுக்கு எரிபொருள் விநியோகித்ததாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கைது!

(மன்னார்)

மன்னார்ப் பகுதியில் இராணுவமும், கடற்படையும், பொலிஸாரும் இணைந்து நடாத்திய தேடுதல் நடவடிக்கையின் போது, விடுதலைப்புலிகளுக்கு எரிபொருள் விநியோகித்த குழு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு, கண்டு பிடிக்கப்பட்ட குழுவில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரும் இடம்பெறுகிறார் என்று, குறிப்பிடப்படுகின்றது.

15 பரல் பெற்றோல், டீசல் என்பன கடல் வழியாக புலிகளின் பிரதேசங்களுக்கு கடத்தப்படுகின்றன என்று, இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் அளித்த தகவல்களின் அடிப்படையிலேயே, இந்த தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

13 பரல் பெற்றோல், 2 பரல் டீசல் என்பன முருங்கன் வழியாக, லொறி மூலம் கொண்டுசெல்லப்பட்ட சமயம் இந்தக் குழுவினர் - பிடிபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிடிபட்ட சமயத்தில் லொறியில் போட் என்ஜின்கள் இரண்டும், இரண்டு போட்களும் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும், தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் பெற்றோல் நிலையத்தில் இருந்து விடுதலைப் புலிகளுக்கு எரிபொருள் வழங்கப்பட்டு வந்ததாகக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் சில வருடத்துக்கு முன்னர், பொலிஸார் பெற்றோல் நிலைய அதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### இந்தியாவில் தங்கியுள்ள அகதிகள்

## புரிந்துணர்வு உடன்பாட்டின் பின் நாடு திரும்புவது அதிகரிப்பு!

விடுதலைப்புலிகளுக்கும், அரசிற்குமிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து, இந்தியாவில் தங்கியுள்ள இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த அகதிகள் மீள தமது சொந்த இடங்களுக்கு திரும்பி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, 1999 ஆம் ஆண்டு தொடக்கம் 2003 ஆம் ஆண்டு வரை சுமார் 886 குடும்பங்கள் இவ்வாறு திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் நடந்தவேளை இடம்பெயர்ந்து சென்ற இவர்கள், தற்போது பாக்கு நீரிணையூடாக திரும்புகின்றார்களெனவும், தெரிவிக்கப்படுகிறது.


தற்போது நாட்டில் மேற்கொண்டு வருகின்ற சமாதான முன்னெடுப்பு காரணமாகவும், வடக்கு - கிழக்கில் காணப்படும் சுமுகநிலை காரணமாகவுமே, அகதிகள் இந்தியாவில் இருந்து திரும்பி வருவதாக, மன்னார் புனர்வாழ்வு, புனரமைப்பு திட்டப் பணிப்பாளர் ஏ.பத்திநாதன் தெரிவித்தார்.

இவ்வாறு, இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் அகதிகள் நெடுந்தீவிற்கும், மன்னாருக்குமே வருகின்றனா. அவர்கள் பின்னர் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# பனைவளத்தின் பெருமையை பறைசாற்றிய பனம்பொருள்களின் உற்பத்திக் கண்காட்சி!

யாழ். நகரில் அண்மைக்காலங்களில் கண்காட்சிகள், கண்காட்சியும் விற்பனையும் என நடைபெற்றன. மக்களிடம் அமோகமான வரவேற்பையும் பெற்றுள்ளன. அந்த வகையில் பனை அபிவிருத்திச் சபையின் 25 ஆம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி - வெள்ளி விழாக் கண்காட்சியும், விற்பனையும் மற்றும் பனைவளம் தொடர்பான போட்டிகளும் கடந்த 20, 21, ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம்பெற்றன.

இக்கண்காட்சியின் நோக்கம் - பொலித்



தீன் பாவனைக்கு மாற்றீடாக, பனம் பொருளின் பயனை வளர்ப்போம், சுற்றுச் சூழலைக்காப்போம் என்ற கருத்தை மையமாகக் வைத்து, இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் பூரண உதவியுடனும், வழிகாட்டலுடனும் பனை அபிவிருத்திச் சபையினர் மேற்கொண்டனர்.

வடக்கு - கிழக்கிலுள்ள எட்டு பனை அபிவிருத்திச் சபைகளின் மாவட்டக் கிளைகளின் முழுமுயற்சியின் வெற்றியே, இவர்களின் படைப்பு. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மக்கள் தமது பாரம்பரிய சொத்தான பனையின் பயனையும், இப்பயனைக் கொண்டு நாம் ஒவ்வொருவரும் எவ்வாறு எமது தேவைகளை நிறைவு செய்யலாம் என்ற பரந்த நோக்கத்தோடு இச்செயற்பாடுகளை மேற்கொண்டனர்.


1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்தப் பனை அபிவிருத்திச்சபையின் தலைவராக கே.சி.வித்தியானந்தன் நியமிக்கப்பட்டார். இவரது நீண்ட பார்வையின் வெளிப்பாடே இச்சபையின் வளர்ச்சி என்று கூறினாலும், இவர் ஒவ்வொரு கிராமமாகச் சென்று, பனையின் பயனையும், இப்பனை எம் மக்களுக்கும், நாட்டிற்கும் என்னென்ன வழிகளில் உதவி வருகிறது என்பதையும் விளக்கினார்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளிலே எமது பரம்பரைச் சொத்துக்களாகக் கடல் வளமும், பனைவளமுமே உள்ளது. இதிலும் பனை வளத்தின் பலனே அதிகமாகவுள்ளது. பனையின் அடிப்பகுதி முதல், நுனிப்பகுதிவரை பயனுள்ளது. இதனைப் பலர் பயன்படுத்தாது உள்ளனர். ஒரு பனையிலிருந்து அண்ணளவாக 841 பொருட்களைப் பெறலாம் என்பது பெரும் பாலானவர்களுக்குத் தெரியாத உண்மை.

கற்பகதரு எனும்போது - வேண்டுவோர்க்கு வேண்டுவதைத் தருவது. இப்பனையைக் கற்பகம் என்கிறோம். இது வும் பல்வேறு வடிவங்களில் பயன் தருபொருட்களைத் தந்துள்ளது, தந்தும் வருகிறது.

இக்கண்காட்சியிலே பனை ஓலையினால் செய்யப்பட்ட பொருட்களின் பகுதியாகவும்- பனை நார், தும்பு ஆகியவற்றினால் செய்யப்பட்ட பொருட்களின் பகுதி - பனம் பொருட்களிலிருந்து தயாரிக்கப்படும் உணவுப் பொருட்களின் பகுதி - ஒடியல், கூழ் விற்பனைப்பகுதி- பனை அபிவிருத்திசபையினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களின் பொருட்கள் இன்னோர் பகுதியாகவும், ஒழுங்கான முறையில், மிக நேர்த்தியாக அடிக்கி வைக்கப்பட்டிருந்தமை பார்ப்போருக்கு மிகமிக இலகுவாக விளங்கிக் கொள்ளக் கூடியதாக அமைந்தது.

இவற்றுடன், திக்கம் வடிசாலை தனது உற்பத்திப் பொருளான பனம் சாராயத்தை கண்காட்சிக்கு வைத்திருந்தது. கள்ளை வடித்து, அதிலிருந்து மதுசாரத்தைப் பெற்று, சாராயத்தை உற்பத்தி செய்கிறார்கள். இந்தப் பகுதியிலேயே பனம் சீனி, பனம் வெல்லம் ஆகியவை உற்பத்தி செய்யப்படும் இயந்திரங்களையும் வைத்து, இவ் உற்பத்திகள் சார்பான விளக்கங்கள் வழங்கப்பட்டது. இந்தக் கண்காட்சியில்- பனை வளங்களைக் கொண்டு உருவாக்கிய பொருட்களை இங்கு இரண்டாகப் பிரித்து நோக்கும்போது, ஒன்று நேரடியான உணவுப் பானங்கள், உணவு தயாரிக்கக் கூடிய பொருட்கள் மற்றையது அழகு சாதன அன்பளிப்புப் பொருட்கள், நாளாந்த தேவையான பொருட்கள். இங்கு



உணவுப் பொருட்களாக - பனங்காய்ப் பணியாரம், பனம்சீனி, பனம் கற்கண்டு, பனம்வெல்லம் பாணிப் பனாட்டு, பனாட்டு, பனம் பானம், பனம் களி, பனம்கட்டி, புளுக் கொடியல், ஒடியல்மா இவற்றுடன் பனம் சாராயம் ஆகிய வைக்கப்பட்டிருந்தன. இவை சத்தான சக்தி மிக்க உணவுகள் என்பதற்கு எம்முன்னோர்களே தக்க சான்று. அவர்கள் இப்பனம் உற்பத்திகளைத் தமது உணவுடன் கலந்து பாவித்து வந்தமையே, அவர்களின் நீடித்த ஆயுளுக்குக் காரணமாகின்றது.

அடுத்து பனை ஓலை, மட்டை, நார், கங்கு மட்டை, பனைமரம் இவற்றிலிருந்து உருவாக்கப்படும் பொருட்களும் இந்தக் கண்காட்சியில் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன.

**கங்குமட்டை**

இந்த மட்டைகளில் 40 கிலோ மட்டையை எடுத்து, அடித்துத் தும்பாக்கினால், 18 கிலோ தும்பு பெறமுடியும். இத்தும்புகளிலிருந்து கயிறு, தும்புத்தடி, கால் துடைப்பம், தூரிகை, அலங்காரப் பொருட்கள் எனப் பலவகையில் இது பயன்படும் பொருட்களைச் செய்யலாம். கங்கு மட்டையிலிருந்து பெறப்படும் தும்பானது, கோறா என அழைக்கப்படுகிறது. இக்கோறா ஏற்றுமதி செய்வதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

**பனை ஓலை**

பனை ஓலை மற்றும் நார் என்ப வற்றைக் கொண்டு - பாய், கடகம், பெட்டி முதலான வற்றைப் பெரும்பாலானவர்கள் செய்தார்கள், செய்தும்வருகிறார்கள். இக் கண்காட்சியைப் பார்த்தவர்கள் பாய், கடகம், பெட்டியுடன் நிற்காது, தமது சிந்தனையைத் தட்டிவிட்டுப் புதிய பொருட்களை வடிவமைப் பார்கள் என்பது நிதர்சனமான உண்மை. ஓலைகள் மூலம் வாழ்த்துமடல், சந்தைக் கூடை, சாதாரண கூடை, தொப்பி, கைப்பை, பாக், கன்னி முடிச்சு பாக், போட்டோ பிறேம், கண்ணாடிப் பிறேம், தேர், துவக்கு சைக்கிள் கூடை, கரகம், காவடி, சிறு பணப்பைகள் இன்னும் ஏராளமான புதிய வடிவங்களிலான பொருட்களுடன்



பனம் நாரினால் செய்யப்பட்டப் பொருடகளின் வித்தியாசமான வடிவமைப்புக்களைக் காணக்கூடியதாக இருந்தது. இது இவர்களின் குழு முயற்சிக்கும், தளராத செயற்பாட்டுக்கும் தக்க பரிசு என்றால் அது மிகையாகாது.

**பனை மரத்தின் வைரப்பகுதி (வைரமான மரம்)**

பனையின் வைரப்பகுதியிலிருந்து பல கைவண்ணப் பொருட்களை உருவாக்கியுள்ளார்கள். இவற்றைப் பார்க்கும்போது சிற்ப, செதுக்க வேலைகளுக்காக பனையையும் பயன்படுத்தலாம் என்பதற்கான முன் உதாரணம் எனலாம். பூவாஸ், குத்து விளக்கு, தேர் இன்னும் எத்தனையோ பொருட்களை வடிவமைத்துள்ளனர். இங்கு சிலருக்குத் தெரிந்தும் பலரிற்குத் தெரியாத விடயம் ஒன்றைக் கூற விரும்புகிறேன். வெளிநாட்டுப் பிரதிநிதிகள் சமாதான ஆர்வலர்கள் என வன்னிக்கு வருபவர்களில் ஒரு சிலர் - தேசியத் தலைவரிடமிருந்து அன்பளிப்புப் பொருட்களைப் பெறுகின்றனர். இந்த அடையாளச் சின்னங்கள் யாவும் பனைமரத்தால் செய்யப்பட்டே வழங்கப்பட்டு வருகிறது. இது ஏனென்றால்- எமது மண்ணின், மக்களின் அடையாளச் சின்னமாகப் பனையினை, அதன் தனித்துவத்தை ஏனையவர்களுக்கும் தெரியப்படுத்துவதற்காகவே.

இந்தக் கண்காட்சியின்மூலம் பனை அபிவிருத்திச் சபையானது, தான் கடந்து வந்த காலங்களில், தனது 25 வயதில் நிறையவே சாதித்துள்ளது. என்னதான் சொல்லி பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனையைத் தவிர்ப்போம் என்று கூறினாலும், இக்கண்காட்சியிலேயே பல பொலித்தீன் பாவனையைக் காணக்கூடியதாகவுள்ளது. இன்றைய நவீனயுகத்தில் கவர்ச்சிக்கு முக்கிய இடம்கொடுக்கும் நிலைக்கு மக்கள் பழக்கப்பட்டுள்ளனர். இவற்றை மாற்றுவதற்குச் சிறிது காலம் எடுத்தாலும், நட்டம் இல்லை என்றே கூறவேண்டும்.

பிளாஸ்ரிக்கூடை, தும்புத்தடி, பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்கள்மூலம் ஒரு உருவத்தை வடிவமைத்து, அதன் மேலே நரகாசுரனான பிளாஸ்ரிக்கை நாடாதீர்கள் எனவும், அதன் பக்கத்தில் பனம் பொருட்களி னால் ஒரு பெண்ணின் உருவத்தையும் வடிவமைத்து, பதிலீட்டுப் பொருட்களின் பாவனையை மிகத் தத்துரூபமாக வெளிக்காட்டியமை - பனை வளத்திற்குத் சிறந்ததோர் முத்திரையாகும்.

பனம்சீனி, பனைவெல்லம் என்பன பெருமளவில், அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தந்த காலமும் உண்டு. பனம் களிமூலம் பற்பசை உருவாக்கப்பட்டுள்ளது. இது போதிய நிதிவளம் இன்மையால் சந்தைப்படுத்த முடியாதுள்ளது.

ஒரு பனையின் 20 வருட வளர்ச்சி யின் பின், பலவகையான பயன்களை அனுபவிக்கலாம். கடந்த காலங்களில் 4 இலட்சம் பனைகள் அழிக்கப்பட்டுள்ளன. பெருமளவு பனைவளம் நிறைந்த பகுதிகள் - இராணுவ ஆக்கிரமிப்பு நிலங்களாகவுள்ளன.

இன்றைய திறந்த பொருளாதாரக் கொள்கையினால், பல வகையான பொருட்கள் - இலகுவானமுறையில் மலிவாகப் பெறக்கூடியதாகவுள்ளமையால், பனம்பொருளின் பாவனை அருகி வருகிறது. நாமும் இதிலிருந்து விலகி வருகிறோம். இந்தநிலை மாறவேண்டும். 'பனையை வளர்த்துப் பயனை அடைவோம், பிளாஸ்ரிக்கை ஒழிப்போம், பனம் பொருளை நாடுவோம்'.

**காவலூர் விஜேந்திரன்**

# யாழ்•குடாநாட்டு நீர்வளங்களின் அபிவிருத்தி பற்றிய ஆய்வு அரங்கம்

யாழ்ப்பாண நன்னீராக்கல் திட்டத்தின் ஒரு பகுதியான தொண்டமனாறு உவர்நீர்த் தடுப்பு அணைத் திட்டத்தின் தற்போதைய நிலையை மதிப்பீடு செய்து, தொடர் நடவடிக்கைக்கான முன்மொழிவுகளை இனங் காண்பதற்காக ஒரு குறுகியகால ஆய்வினை மேற்கொள்வதற்கு உலக வங்கி சிபார்சு செய்துள்ளது.

அந்த ஆய்விற்கான விடயங்களினை வரையறை செய்வதற்கு வசதியாக, இந்தத் திட்டத்தின் பங்காளிகளினதும், சமூகத்தினதும் நிபுணர்களினதும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஆய்வரங்கு காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.15 வரை யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 3 உவர் நீர்த்தடுப்பு அணைகளும், 17 குளங்களும் தற்பொழுது நியாப் திட்டத்தினால் புனரமைப்பு செய்யப்படுகின்றது. அவற்றில் செய்து முடிக்கப்பட்ட திட்டங்களின் நன்மைகளை நேரடியாகவே மக்கள் உணரத் தொடங்கியுள்ளார்கள்.

இன்னும் 7 உவர்நீர்த்தடுப்பு அணைகளும் 13 குளங்களும், 1 வடிவாய்க்கால்களும் புனரமைப்பதற்கான திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2 ஆவது கட்ட நியாப் திட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தின் உவர் நீர்த்தடுப்ப அணைகள், குளங்கள் வடிவாய்க்கால் புனரமைப்பதற்குக் கூடியகவனம் செலுத்தப் படவுள்ளது.

இவற்றினை மக்களின் தேவையினை அறிந்து செயல்படுத்துவதற்காக நியாப் ஆய்வரங்குகளையும், ஆய்வுகளையும் செய்து வருகின்றது.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், அரசாங்க அதிபரும் இவைகள் திறம்படச் செயற்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இந்தத் திட்டத்துக்கான நிதியுதவி வழங்கும் உலக வங்கியின் ஆலோசகர் எந்திரி நிகால் பெர்னாண்டோ தகுந்த ஆலோசனைகளை வழங்கி வருகின்றார்.

## கையேடு வெளியீடு

யாழ்.சமூக மேம்பாட்டு நிறுவனம் யாழ்ப்பாணத்தில் இயங்கும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து பொதுமக்கள் பெறும் உதவிகள், சேவைகள் பற்றிய விபரங்களை கையேடாக வெளியிடவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனங்கள் தாம் வழங்கி வரும் உதவிகள் மற்றும் சேவைகளை பற்றிய விபரங்களை 31ஆம் திகதிக்கு முன்னர் தந்துதவுமாறு மேற்படி நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.

(91)



(சுதுமலை)

மானிப்பாய் கட்டுடை யுவசக்தி முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (ப.தெ.வ) சு.கணேசமூர்த்தி மங்கள விளக்கேற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படத்தில் காணலாம் . (91)

# செஞ்சிலுவைச் சங்க தலைமையகம் மீது பக்தாத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்!

## நேற்றைய தாக்குதல்களில் 34 பேர் உயிரிழப்பு; 224 பேர் காயம்






ஈராக் தலைநகர் பக்தாத்தின் மத்திய பகுதியில் அமைந்துள்ள செஞ்சிலுவைச் சங்க தலைமையகத்தின் மீதும், வேறு மூன்று இலக்குள் மீதும் நடத்தப்படட தற் கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 34 பேர் உயிரிழந்தனர். 224 இற்கும் மேற்பட் டோர் காயமடைந்தனர்.

வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட அம் புலன்ஸ் வண்டி ஒன்று, செஞ்சிலுவை அலுவலகத்தின் தலைமையக வாசலை அண்மித்தபோது, வெடித்துச் சிதறியது. இதனால்- அந்தப் பகுதி ஒரே புகைமண் டலமாகக் காட்சியளித்தது.

இதனையடுத்து அந்தப் பிரதேசததுக் குள் எவரும் உட்செல்லாதவாறு அமெரிக் கப்படையினர் தடைசெய்துள்ளனர்.

இந்தத் தற்கொலைத் தாக்குதல் குறித்து செஞ்சிலுவைச் சங்க அதிகாரி யொருவர் குறிப்பிடும்போது,

20 ஆண்டுகளாக மனிதநேயப் பணி களில் ஈடுபட்டுவரும் எம்மீது தாக்குதல் நடத்துவது விசனமளிப்பதாக உள்ள தெனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, பொலிஸ் நிலையங்களை மையமாக வைத்து நடத்தப்பட்ட தாக்கு தல்களில், 3 அமெரிக்க வீரர்கள் கொல லப்பட்டும் நால்வர் காயமடைந்துமுள்ளனர்.

இதனிடையே, அமெரிக்க கூட்டுப் படை யினர் மீது தாக்குதல்கள் அதிகரித்து வருவ தாகவும்- சதாம் ஆதரவாளர்கள் தம்மை நன்கு ஒழுங்குபடுத்தி நுட்பமாகப் போரிட்டு வருவதாகவும்- ஈராக்கிற்கான அமெரிக்க நிர்வாகி போல் பிறேமர் தெரிவித்தார்.

## மும்பாஸா குண்டுத் தாக்குல்; சந்தேக நபர்கள்மீது வழக்கு!



இஸ்ரேலியருக்கு சொந்தமான உல்லாச விடுதியொன்றில் நடத்திய கார்க் குண்டுத் தாக்குதலில் 12 கென்யாவைச் சேர்ந்தவர்களும், 3 இஸ்ரேலியர்களும் கொல்லப்பட்ட

6 கென்யா நாட்டவர்கள் மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்டுள் ளது.

மும்பாஸா விமானநிலையத்திலி ருந்து புறப்பட்ட விமானமொன்றை சுட்டு வீழ்த்துவதற்கு எத்தனித்ததா கவும் இவர்கள் மீது குற்றம் சுமத் தப்பட்டுள்ளது.

இதனிடையே, கென்யாவிலுள்ள மனிதநேய அமைப்புகள் பயங்கரவா தம் என்ற பெயரில்- மக்கள் கைது செய்யப்பட்டு, துன்புறுத்தப்படுவதாக தெரிவித்திருந்தது.

அண்மையில் 1500 இற்கு மேற் பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு, பின் குற்றங்கள் எதுவுமில்லையென விடு விக்கப்பட்டதை இவ்வமைப்பு தெரி வித்துள்ளது.

## இஸ்ரேலுடன் யுத்தநிறுத்தம் செய்யுமாறு

# பலஸ்தீனப் பிரதமர் அஹமட் குரேய் ஹமாஸ் போராளிகளுக்கு அழைப்பு

பலஸ்தீனிய பிரதமர் அகமட் குரேய் - இஸ்ரேலுடன் போர்நிறுத் தத்தை ஏற்படுத்தி பேச்சில் ஈடுபடு மாறு ஹமாஸ் இயக்கத்துக்கு கடி தம் மூலம் அழைப்பு விடுத்துள்ளார். இத்தகவலை ஹமாஸ் அமைப்பின் பேச்சாளர் இஸ்மாயில் கனியா பத் திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

பிரதமர் அகமட்டின் அழைப்பிற்கு முன்னே தாம் அவரைச் சந்திப்பதற் கான முயற்சிகளை மேற்கொண் டுள்ளதாகவும் - அவரின் கருத்தை அறிந்த பின், தான் என்ன பதில் அளிப்பதென முடிவெடுக்கலாம் என அவர் தெரிவித்தார்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனிய தீவிர வாதிகளுக்கும் இடையேயான பேச்சு வார்த்தைகள் கடந்த ஜூன் மாதம் ஆரம்பித்து, ஹமாஸ் தலைவர் ஒரு வரின் கொலையுடன் நிறுத்தப்பட் டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## உலக நோக்கு

## சோமாலியாவில்

# ஆசிரியத் தம்பதிகள் மரணம்; சந்தேகத்தில் 10 பேர் கைது!

சோமாலியாவில் தன்னிச்சையாக பிரகடனப்படுத்திய நாடான சோமாலி லந்தில் பிரித்தானியாவைச் சேர்ந்த ஆசிரிய தம்பதிகளான தலைமை ஆசிரியர் ரிச்சாட் அலிங் ரொன் அவரது மனைவி எனிற் ஆகியோ ரின் மரணம் தொடர்பாக பத்துப் பேர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களின் கொலையாளியை கண்டு பிடிப்பதற்கு, 10,000 டொலர் களை வழங்குவதற்கு பிரிந்த பிரதே சததின் ஜனாதிபதி டசீரிலலே கதீன முன்வந்துள்ளார்.

வெளிநாட்டவரை, அவர்களின் பாதுகாப்புக் காணரங்களுக்காக உடன் நாட்டில் இருந்து வெளியேறுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். அரசை நிலை குலையச் செய்வதற்காக- வெளி நாட்டவர் அங்கிருப்பதை விரும்பாத வர்களே திட்டமிட்டு இக்கொலை களை நடத்திவருவதாக ஜனாதிபதி கதீன் தெரிவித்துள்ளார்.

மேலும், தலைமை ஆசிரியை அலின்ரொன் கடந்த 32 ஆண்டுகளாக ஆபிரிக்காவில் கடமையாற்றிவருகின் றார். தன்னுடைய ஓய்வு காலத்தை அடையும் வரை, போரால் சிதைந் துள்ள ஆபிரிக்க நாட்டில் பணிபுரிய வேண்டும் என்பதே அவரது விருப்ப மாக இருந்தது.

## இசைக்குழு என்ற போர்வையில்


# வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பிய பஞ்சாபி பாடகர் பொலிஸாரிடம் பிடிபட்டார்

பஞ்சாப்பைச் சோந்த புகழ்பெற்ற பாடகரான டாலெர் மெகின்டி மேற்கு நாடுகளுக்கு இசைக் குழுவினர் என்ற போர்வையில் ஆட்களைக் கடத்திய தாக பொலிஸார் அவரைக் கைது செய்து பரியாலா பொலிஸ் நிலை யத்தில் தடுத்து வைததுள்ளனர்.

இப்பாடகர் பலரை வெளிநாடுக ளுக்கு அழைத்துச் செல்வதாகத் தெரி வித்து, அதிகளவிலான பணத்தை அவர்களிடம் இருந்து பெற்றுள்ளதா கத் தெரிவிக்கப்படுகிறது.

இவரது சகோதரர் சம்சீர் சிங் ஏற கனவே இதேபோன்று வெளிநாடு களுக்க ஆட்களைக் கடத்தியமை தொடர்பாக கைதுசெய்யப்பட்டுள் ளார்.

பஞ்சாப் இசையான பங்காராவை மேற்கத்திய இசையுடன் இணைத்து புதுமைகள் செய்தவர் மெகன்டி என் பது குறிப்பிடத்தக்கது.



20 வாரங்கள் மாத்திரம் ஆயுளைக் கொண்ட சிசு ஒன்று கருப்பையில் 'விரலைச் சூப்பிக்'கொள்வைத சிஷிடிஸ் பட்டப்படிப்பாளர் படமெடுத் துள்ளார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அக்கரைப்பற்று சம்பவங்கள் தொடர்பாக புலிகள் - முஸ்லிம் பிரதிநிதிகள் சந்திப்பு!

(அம்பாறை)

வயற்காணிகள் தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சையை அடுத்து, தமிழ்-முஸ்லிம் மக்களிடையே நேற்றுமுன்தினம் நடைபெற்ற மோதல்சம்பவங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக - அக்கரைப்பற்றில் நேற்றைய தினம் விடுதலைப் புலிகளுக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்குமிடையே சந்திப்பொன்று நடைபெற்றது.

திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நேற்றுக்காலை 10 மணி தொடக்கம் 12.30 மணிவரை அம்பாறை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் தலைமையில் நடைபெற்ற, இந்தச் சந்திப்பில் - விடுதலைப் புலிகளின் தரப்பில் மட்டு, அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா ஆகியோரும், முஸ்லிம்கள் தரப்பில் ஐ.எம்.இப்ராஹிம், அக்கரைப்பற்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அமைப்பாளர் யு.எல்.உவைஸ் மற்றும் வட்டமடு சம்பவத்தில் காயமடைந்த முஸ்லிம் மக்களும் ,இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட முஸ்லிம்கள் - நாம் ஏற்கனவே சந்தித்து இணக்கம் காணப்பட்டதற்கமையவே, நேற்று முன்தினம் எமது வயல் நிலங்களுக்கு - பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதற்காகச் சென்றோம். ஆனால், எம்மை அங்கு நின்ற சிலர் தாக்கினர். அது எமக்கு மனவேதனையைத் தருகின்றதெனத் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த இ.கௌசல்யன் - நேற்று முன்தினம் வட்டமடுப் பகுதியில் முஸ்லிம்கள் தாக்கப்பட்டதற்கு வருத்தம் தெரிவித்ததுடன், இந்தச் சம்பவத்திற்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்து கடும் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பு முடிந்த பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த கௌசல்யன் - வட்டமடுவில் மட்டுமல்ல, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்களிலும் உள்ள முஸ்லிம்களின் வயற்காணிகளுக்குரிய ஆவணங்கள் இருந்தால் பயிர்ச்செய்கையினை மேற்கொள்ளலாம். முஸ்லிம்கள் வட்டமடுப் பகுதியில் தமது வயற்காணிகளின் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்களை இன்னமும் வட்டமடுப் பிரதேச செயலரிடம் ஒப்படைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், ஞாயிற்றுக்கிழமை முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மிகுந்த வேதனையை அளிக்கின்றது. இந்தச் சம்பவங்களிற்குப் பின்னால் புலிகள் இருந்ததாக, முஸ்லிம் மக்களிடையே சிலர் தவறான பிரசாரங்களை செய்கின்றார்கள். புலிகள் அப்படி நிற்கவேண்டிய அவசியமில்லை. ஏனெனில், நாங்கள் இன்று பலம்பொருந்திய அமைப்பாக உள்ளோம். எனவே, நாங்கள் சொல்வதைத்தான் செய்வோம் - எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இன்று காலை விடுதலைப் புலிகளும், விசேட அதிரடிப்படையினரும், அம்பாறை மாவட்டப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் வட்டமடுவிற்குச் சென்று- முஸ்லிம்கள் தாக்கப்பட்ட இடத்தையும், வயற்காணிகளையும் பார்வையிடவுள்ளனர். (07)

## நாற்சந்தி

கிண்ணியா பிரதேசத்தில் தமிழ் - முஸ்லிம் இனங்களிடையே முரண்பாட்டை ஏற்படுத்தும் சக்திகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க இருதரப்பினரதும் சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

நல்லது. நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம்தான்.

யார் இந்த முரண்பாட்டை ஏற்படுத்தும் சக்திகளாக இருக்கின்றனர்? அவர்களின் இலக்கு எது?

இவர்களின் பின்னணியில் யார் இயங்குகின்றனர்?

இந்தக் கேள்விகளுக்கான விடையை அறிந்துகொள்ளல் மட்டுமல்ல. அவற்றைப் பொதுமக்கள் மத்தியில் பகிரங்கப்படுத்தி நாடறியவைக்க வேண்டியதே முக்கியம். அதுவே பிரதான நடவடிக்கையாகவும் இருக்கவேண்டும்.

சிறுபான்மை மக்கள் ஒன்றுபடுவது, ஒருமித்துக் குரல்கொடுப்பது, தமது உரிமைகளுக்காக ஒன்றாகப்போராடுவது - காலத்தின் அவசியமாக இருக்கையில், அதனைக் குழப்பத்திட்டமிடுவது பெரும்பான்மையினப் பேரினவாதிகளின் இயல்புதான்... இது ஒன்றும் புதிய விடயமல்ல.

ஆனால், சிறுபான்மை இனத்துக்குள்ளேயே, பெரும்பான்மையினரின் கைக்கூலிகளாகீ - கருங்காலிகளாக செயற்படுவோர் குறித்தே அக்கறை செலுத்தவேண்டும். அவர்களே ஆபத்தான சக்திகள்.

'முஸ்லிம்களின் உரிமை மறுக்கப்பட்டால் - அவர்கள் ஆயுதம் ஏந்திப் போராடவேண்டிவரும்' என்று கதிர்காமர் கூறியதைக் கவனத்தில் கொண்டால்சரி... வேறு உதாரணம் தேவையில்லை...

இது தமிழர்களில் இருந்து இஸ்லாமியத் தமிழரை வேறுபடுத்த நினைக்கும் மித்திரபேதத் தந்திரமாகும்...

'வீடெரிக்கிற ராசாவுக்கு நெருப்பெடுத்துக் கொடுக்கிற ஆலோசகர்கள் எந்தக் காலத்திலும் இருக்கவே செய்கின்றனர்' என்கிறார்ஒரு இஸ்லாமிய சோதரர்.

-தெருவாசி

## எரியுண்ட...

தினம் தனது வீட்டிற்கு செல்வதாகக் கூறிவிட்டு சென்றதாகவும், அதன பின்னரே இவரது சடலம் ஒரு கிடங்கொன்றிலிருந்து மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவ இடத்திற்கு சென்ற அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். (121)

## அமைச்சர்...

தொ.காவின் நிதிச் செயலாளரும், கமத்தொழில் கால்நடை அபிவிருத்தி பிரதி அமைச்சருமான முத்துசிவலிங்கம், இ.தொ.காவின் உபதலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆர். யோகராஜன் மற்றும் இ.தொ.காவின உப தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.ஜெகதீஸ்வரன் ஆகியோரும் கலந்துகொள்ளவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கைத்தொழில்...

இவரது பாதுகாப்பைக் காரணங்காட்டி, சுமார் இரண்டரை மணித்தியாலம் இவர் காத்திருக்கவேண்டி ஏற்பட்டதாகவும் - இதனால், செயலகக் கூட்டத்திற்கு தாம் தாமதமாக வந்ததாகவும் பந்துல பெரேரா தெரிவித்தார்.

## பதவி...

காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சனின் நடவடிக்கை குறித்து கடற்படைத் தளபதியிடமிருந்து அறிக்கையொன்றை ஜானாதிபதி சந்திரிகா பெற்றதையடுத்தே, அவரை பதவி நீக்கும்படியான கோரிக்கையை ஜனாதிபதி விடுத்ததாக, நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நோர்வேப் பிரதமர் பொண்டவிக் - ஜனாதிபதி சந்திரிகாவின் கடிதத்துக்கு குறிப்பிட்ட காலத்தில் பதில் அனுப்பியுள்ளபோதும், கண்காணிப்புக்குழுத் தலைவர் மீது உடனடியாக எந்த நடவடிக்கையும் எடுக்காதது குறித்து ஜனாதிபதி சந்திரிகா ஏமாற்றமடைந்திருப்பதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

## பிரபாகரன்....

உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இந்த மனுக்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களப் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிர மெண்டிஸ் உட்பட மூவர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மத்திய வங்கிக் குண்டுவெடிப்புச் சம்பந்தமாகவே தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு 200 வருடகாலச் சிறைத தண்டனை விதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (01)

# அமைச்சர்கள் அஸ்வர், ஜெயலத் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர்!

நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர், புனர்வாழ்வு, மீள்குடியமர்த்துகை அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன ஆகிய இரு அமைச்சர்களும் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தனர்.

இரு அமைச்சர்களும் தனித்தனியாகவே குடாநாட்டுக்கு வருகைதந்தமை குறிப்பிடத்தக்கது. முன்னதாக வந்த அமைச்சர் அஸ்வர், மாவட்ட செயலகத்தில் - அரச அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் மற்றும் மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினைகள், மக்களின் இயல்புவாழ்க்கை ஏற்படுத்தப்படாமை போன்ற விடயங்கள் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சந்திப்பை முடித்துக்கொண்டு, அமைச்சர் அஸ்வர் - நாடாளுமன்ற உறுப்பினர்களின் உதவியாளர்களுக்கான செயலமர்வு ஒன்றில் கலந்துகொண்டார்.

அதன்பின், யாழ்.மக்கள் பணிமனைத் தலைவர் சுபியானையும் சந்தித்துக் கலந்துரையாடினர். யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் பகுதிகளுக்கு அமைச்சர் நேரில் சென்று நிலமைகளை ஆராய்ந்தார்.

இதேவேளை, அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களுக்கான கலந்துரையாடலில் கலந்துகொள்வதற்காகவே யாழ்ப்பாணம் வந்திருந்தார். இவருடன் அமைச்சின் மேலதிக செயலாளர் சண்முகலிங்கம், அமைச்சின் ஆலோசகர்கள் அன்ரன் டட்லி திஸநாயக்க ஆகியோரும் வருகைதந்தனர்.

சகன்யா எனும் கடனுதவித்திட்டம் - யாழ்.வர்த்தக வங்கி மூலமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின்மூலம், யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த கைத்தொழிலாளர்கள் பயன்பெறமுடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது. இத்திட்டத்தை நேற்று அங்குரார்ப்பணம் செய்துவைத்து, உரையாற்றிய அமைச்சர் ஜெயலத்-

வடக்கு - கிழக்கு மக்கள் கடந்த 20 வருடகாலமாகக் கஷ்டப்படுகிறார்கள். இன்றைய சமாதான சூழலை ஆரம்பத்தில் நம்பிய மக்கள் இன்று பொறுமையிழந்துவிட்டார்கள்.

நான் வடக்கு - கிழக்குக்கு எவ்வித உதவிகளையும் செய்வதில்லை எனச் சிலர் கூறுகிறார்கள். இவர்கள் சொல்வதில் எவ்வித உண்மை இல்லை. என்னால் இயன்றளவு உதவிகளைச் செய்துவருகிறேன். நான் அரசியல் லாபம் கருதி வடக்கு கிழக்கு மக்களுக்கு உதவிசெய்யவில்லை. அவர்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவுசெய்யப்படவேண்டும் என்பதில் நான் கவனமாக உள்ளேன், எனவும் ஜெயலத் தெரிவித்தார்.

அமைச்சர் ஜெயலத் கலந்துகொண்ட இந்தக் கலந்துரையாடலில் - யாழ்.மாவட்டத்தின் பல்வேறு கைத்தொழில் நிறுவனங்களைச் சேர்ந்தோர் கலந்துகொண்டனர். இவர்களுக்கு சகன்யா கடனுதவித் திட்டம் பற்றி - கைத்தொழில் அபிவிருத்திசபைத் தலைவர் பந்துல பெரேரா விளக்கிக்கூறினார்.

## யாழ்.திருக்குடும்ப...

கைக்குண்டு இருந்த வகுப்பறைக்கு அண்மையில், இராணுவ முகாம் ஒன்று அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கைக்குழந்தையை விற்க முயன்ற தந்தை பொலிஸாரால் கைது!

தனது குழந்தையை விற்க முயன்ற தந்தையை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

யாழ்.நகரில் நேற்று முன்தினம் இரவு கஸ்தூரியார் வீதிச் சந்தியில் வைத்து தனது ஏழு மாதப் பெண் குழந்தையை இருநூற்று ஐம்பது ரூபாவுக்கு விற்கத் தந்தையொருவர் முயன்றுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்ததையடுத்து, இவரைக் கைது செய்து பொலிஸார் யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். நீதிவான் குழந்தையை தாயிடம் ஒப்படைக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

## பயிற்சியில் ஈடுபட்டிருந்த...

எரிக் ரோகிதவின் நெறிப்படுத்தலில், சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார்.

படையினரின் 52 -1 படைப்பிரிவின் பயிற்சித் தளத்தில் - பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளை மயக்கமுற்று நிலத்தில் வீழ்ந்து இவர் உயிரிழந்ததாக, சாவகச்சேரி நீதிமன்றில் படைத்தரப்பால் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் சடலத்தின பிரேத பரிசோதனையை மேற்கொண்டு அறிக்கையினை சமர்ப்பிக்குமாறும், சடலத்தை உறவினர்களிடம் கையளிக்குமாறும், சாவகச்சேரி பதில் நீதிவான் எஸ்.பாலகிருஷ்ணன் சாவகச்சேரி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதனையடுத்து, விமானப்படையினரின் விமானம் மூலம் இறந்த படைச்சிப்பாயின் சடலம் கொழும்பிற்கு எடுத்துச்செல்லப்பட்டது. (202)

## பெண் மீது பொலிஸார்...

தண்டனை பெற்றுக்கொடு. அல்லா விடில் அரசுக்கு எதிராக முழுமக்களும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொள்வோம் போன்ற வாசகங்களைத் தாங்கியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் சென்றனர்.

இந்தப் பேரணியில் மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப், பிரஜைகள் குழுத்தலைவர் வணபிதா எமிலியானுஸ்பிள்ளை, மன்னார் மாவட்ட வெகுஜன ஒன்றியப் பிரதிநிதி பி.சிந்தாத்துரை, மன்னார் மாவட்ட மாதர் சங்கம், தமிழரசுக் கட்சிப் பிரமுகர் அன்ரனி மார்க், முன்னாள் நாடளுமன்ற உறுப்பினர் விநோ நோகராதலிங்கம் உட்படப் பலர் இந்தப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் ஜோன் அமரதுங்க ஆகியோருக்கு மகஜர்கள் - மன்னார் மண்டூர் அரசாங்க அதிபர் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டது. (201)




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.